# தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2015 - 2016

**மானியக் கோரிக்கை எண்.32**

ப. மோகன்
ஊரகத் தொழில் மற்றும்
தொழிலாளர் நல அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2015

## அட்டவணை


| எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| | **I. தொழிலாளர் துறை** | |
| 1 | தொழில் உறவுகள் | 3 |
| 2 | பல்வேறு தொழிலாளர் சட்டங்களின் அமலாக்கம் | 8 |
| 3 | குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழித்தல் | 17 |
| 4 | பீடித் தொழிலாளர்களின் நலன் | 24 |
| 5 | தொழிலாளர் நல வாரியங்கள் மற்றும் சமூக பாதுகாப்புத் திட்டங்கள் | 25 |
| 6 | நுகர்வோர் பாதுகாப்பு | 36 |
| 7 | தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் | 37 |
| 8 | தமிழ்நாடு கட்டுமானக் கழகம் | 38 |
| | **II. தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம்** | |
| 9 | தொழிற்சாலைகளில் தொழிலாளர் சட்ட அமலாக்கம் | 46 |
| 10 | கட்டடம் மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம் 1996 மற்றும் தமிழ்நாடு விதிகள் 2006 | 55 |
| 11 | தொழிற்சாலைகள் மற்றும் கட்டுமான பணியிடங்களில் பணிபுரியும் தொழிலாளர்களது உடல்நலம், பாதுகாப்பு, பயிற்சி மற்றும் மேம்பாட்டுச் செயல்பாடுகள் | 59 |

| எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 12 | மாநில பாதுகாப்பு விருதுகள் | 66 |
| **III. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை** | | |
| 13 | மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்புப் பிரிவுகள் | 74 |
| 14 | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் மையங்கள் | 75 |
| 15 | வேலைவாய்ப்பு அலுவலகங்களின் செயல்பாடுகள் | 78 |
| 16 | வேலைவாய்ப்பற்றோருக்கான உதவித் தொகை திட்டம் | 83 |
| 17 | தேசிய வேலைவாய்ப்புப் பணியினை தேசிய தொழில்நெறி பணியாக மாற்றுதல் | 85 |
| 18 | கைவினைஞர் பயிற்சித் திட்டம் | 89 |
| 19 | பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படும் நலத்திட்டங்கள் | 92 |
| 20 | ஆதிதிராவிடர் / பழங்குடி இனத்தவர்க்கான தொழிற்பயிற்சி | 97 |
| 21 | தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் | 99 |
| 22 | திறன்மிகு மையங்கள் (அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களை மேம்படுத்துதல்) | 105 |
| 23 | திறன் மேம்பாட்டு முனைப்பு – வேலைவாய்ப்பு திறன் எய்தும் பயிற்சி | 114 |

| **எண்** | **பொருளடக்கம்** | **பக்க எண்** |
|---|---|---|
| 24 | சாதனைகள் மற்றும் முனைப்பு நடவடிக்கைகள் | 122 |
| 25 | தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் | 125 |
| **IV.** | **அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்** | 130 |
| **V.** | **மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரகம்**<br>**(தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டம்)** | 133 |

## I. தொழிலாளர் துறை

தமிழ்நாடு அரசு நீடித்த தொழில் வளர்ச்சிக்கு அடித்தளமான, இணக்கமான தொழில் உறவுகளை பேணுவதில் தனித்துவம் பெற்று விளங்குகிறது. தமிழக அரசின் தொழிலாளர் கொள்கையானது ஒட்டு மொத்த தொழில் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு, சம அளவில் பங்களிக்கும் தொழிலாளியின் நலனையும் அடிப்படையாக கொண்டுள்ளது. பொருளாதார முன்னேற்றம், சமூகநீதி, தொழில் உறவில் இணக்கம், மனிதவள மேம்பாடு, தொழிலாளர்களின் வாழ்வாதாரம் மற்றும் பணி செய்யும் சூழலை மேம்படுத்துதல், சமூக தொழில் உறவுகள், தொழில் அமைதி மேம்படும் வகையில் இணக்கமான சூழலை உருவாக்கி பாதுகாத்தல் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பு அளிப்பதில் தொழிலாளர் நல சட்டங்களை செம்மையாக அமலாக்கம் செய்தல் ஆகிய இலக்குகளுடன் மாநிலத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் தொழிலாளர் நிர்வாக உறவுகள் பேணப்படுகிறது.

**செயல்பாடுகள்**

தொழிலாளர் துறை, தொழிலாளர்களின் சட்டப்பூர்வமான உரிமைகளை பாதுகாக்கும் வகையிலும், அவர்களின் நலனை உறுதி செய்யும் பொருட்டும், வேகமான பொருளாதார வளர்ச்சி மற்றும் செழிப்பினை அடைந்திடவும், இணக்கமான தொழில் உறவுகளை பாதுகாக்கும் வகையிலும், அமைதியான தொழில் சூழலை ஏற்படுத்தும் வகையிலும் தொழிலாளர் சட்டங்களை அமல்படுத்தி வருகிறது. குழந்தைத் தொழிலாளர் முறையினை அகற்றுதல், தொழிற்தகராறுகளை தீர்த்துவைத்தல், சட்டமுறை எடையளவு சட்டத்தினை அமலாக்குதல் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைத்து தொழிலாளர்களுக்கும் சமூக பாதுகாப்பு வழங்குதல் ஆகியவை தொழிலாளர் துறையின் முக்கியமான செயல்பாடுகள் ஆகும்.

**நிர்வாக அமைப்பு**

நிர்வாகத்தினருக்கும், தொழிலாளர் வர்க்கத்திற்கும் இடையே இணக்கமான நல்லுறவினை ஏற்படுத்தும்

பொருட்டு பல்வேறு தொழிலாளர் சட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கு 568 அலுவலர்களும் மற்றும் 2,180 பணியாளர்களும் தொழிலாளர் துறையில் உள்ளனர். இத்துறையின் கூடுதல் தொழிலாளர் ஆணையர், குழந்தை தொழிலாளர் மைய பணிகள் மற்றும் நலன் பிரிவு பணிகளை ஒருங்கிணைத்து கவனித்துவருகிறார். இத்துறையில் 12 தொழிலாளர் இணை ஆணையர்கள், 16 தொழிலாளர் துணை ஆணையர்கள், 24 தொழிலாளர் உதவி ஆணையர்கள், 100 தொழிலாளர் அலுவலர் தரத்திலான அலுவலர்கள், 70 தொழிலாளர் துணை ஆய்வர்கள், 219 தொழிலாளர் உதவி ஆய்வர்கள், 20 புள்ளிவிவர ஆய்வர்கள், 101 முத்திரை ஆய்வர்கள், 2 உதவி மருத்துவர் (தோட்டங்கள்), 1 கணக்கு அலுவலர் மற்றும் 1 மக்கள் தொடர்பு அலுவலர் பணியாற்றி வருகின்றனர்.

## தொழில் உறவுகள்

தொழில் நல்லுறவு என்பது வேலையளிப்பவருக்கும் தொழிலாளர்களுக்கும் இடையிலான புரிந்துணர்வு,

ஒற்றுமை மற்றும் நல்லுறவு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டதாகும். சமூக நீதி என்பது தொழில் உள்ளிட்ட அனைத்து இடங்களிலும் சமூக பொருளாதார வேறுபாடுகள் மற்றும் ஏற்ற தாழ்வுகளை களைவதாகும். தொழில் நல்லிணக்கம் என்பது வேலை அளிப்பவர்கள் மற்றும் தொழிலாளர்களிடையே ஏற்படும் கோரிக்கைகளுக்கு இருதரப்பினருக்கும் இடையே நல்லுறவு மற்றும் நல்லிணக்கம் ஏற்படுத்தும் நோக்கத்தோடு இருதரப்பினரும் ஏற்கக்கூடிய வகையில் சட்டப்படியான மற்றும் நியாயமான தீர்வு காண வழிவகை செய்கிறது. தொழிற் தகராறுகள் சட்டம், 1947–ன்கீழ் தொழிற்தகராறுகளில் தேவைப்படும் நேர்வில் தலையிட்டு தீர்வு காண அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த அதிகாரத்தினை பயன்படுத்தி, தொழிலாளர் துறையின் சமரச அமைப்புகள் செயலாற்றி வருகின்றன. தொழிற் தகராறுகள் ஏற்படும் நேர்வில் தொழில் அமைதியின்மையை முன்பே கண்டறிந்து சமரச தீர்வு அமைப்பின் மூலம் அதை தணிப்பதற்கும், உற்பத்தியில் ஈடுபடும் இரு பங்குதாரர்களும் தங்களது கவனத்தை தேவையற்ற பயனில்லாத தாவாக்களில் ஈடுபடுவதால்

ஏற்படும் உற்பத்தி பாதிப்பை தடுப்பதற்கும் ஏற்படுத்தப்பட்ட ஒரு மேன்மையான சட்டமாகும். இது உற்பத்தி தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு தொழிலக இணக்க சூழலை உருவாக்குகிறது.

**சமரசம்**

2014–2015ஆம் ஆண்டில் எழுப்பப்பட்ட 7,719 தொழிற்தாவாக்களில் 6,381 வழக்குகள் தீர்த்துவைக்கப்பட்டு, அவற்றுள் 4,062 வழக்குகள் சுமூகமான முறையில் முடிக்கப்பட்டன. பல்வேறு தொழிற்சாலைகளில் நடைபெற்ற 46 வேலை நிறுத்தங்கள் மற்றும் 3 கதவடைப்புகள் சீரிய முறையில் தீர்த்து வைக்கப்பட்டன.

108 ஆம்புலன்ஸ் சேவை, தமிழ்நாடு போக்குவரத்து கழகம் மற்றும் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் நடைபெற்ற சில முக்கிய வேலைநிறுத்தப் பிரச்சனைகள் சமரச அலுவலர்களின் உரிய நேர தலையீட்டினால் சீரிய முறையில் தீர்த்துவைக்கப்பட்டன.

**தொழிலாளர் நீதிமன்றங்கள் மற்றும் தொழிலாளர் தீர்ப்பாயம்**

சமரச முறிவுகள் ஏற்படும் நேர்வில் அவ்வழக்குகளுக்கு தீர்வு காண, மாநிலத்தில் 12 தொழிலாளர் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றுள் சென்னையில் 4 தொழிலாளர் நீதிமன்றங்களும், வேலூரில் 2 தொழிலாளர் நீதிமன்றங்களும், சேலம், கோயம்புத்தூர், கடலூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் தலா ஒரு தொழிலாளர் நீதிமன்றமும் செயல்பட்டு வருகின்றன. தொழிற் தகராறுகள் சட்டம் 1947–ன் பிற்சேர்க்கையான இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இனங்களை விசாரித்து தொழிலாளர் நீதிமன்றங்கள் தீர்ப்பளிக்கின்றன. 2014 ஆம் ஆண்டில் 2,631 வழக்குகள் பெறப்பட்டு 2,263 வழக்குகள் முடிக்கப்பட்டன.

தொழிற் தகராறுகள் சட்டம் 1947–ன் பிற்சேர்க்கையான மூன்றாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இனங்களை விசாரித்து தீர்வம்

வழங்க சென்னையில் ஒரு தொழிற் தீர்ப்பாயம் இயங்கி வருகிறது. 2014–ஆம் ஆண்டில் 42 வழக்குகள் பெறப்பட்டு 34 வழக்குகளில் தீர்வம் வழங்கப்பட்டுள்ளன.

**தொழிலக வேலைவாய்ப்பு (நிலையாணைகள்) சட்டம், 1946**

தொழில் நிறுவனங்களின் வேலை அளிப்போர், சான்றளிக்கப்பட்ட நிலையாணைகள் மூலமாக தொழிலாளர்களின் பணி நிலைமைகளை வரையறுக்க இச்சட்டம் வழிவகை செய்கிறது. 2014–2015–ஆம் ஆண்டில், 686 தொழில் நிறுவனங்களின் நிலையாணைகள் சான்றளிக்கப்பட்டுள்ளன.

**தொழிற்சங்கங்கள் சட்டம், 1926**

தொழிற்சங்கங்களை பதிவு செய்யவும் மற்றும் தொழிற்சங்க பதிவு குறித்த நடைமுறையினை வகுக்கவும் இச்சட்டம் வழிவகை செய்கிறது. தொழிற்சங்கங்களின் கூடுதல் பதிவாளர்களால் இதுவரை மொத்தம் 12,802 தொழிற்சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 2014–2015–ஆம் ஆண்டில், 205 தொழிற்சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## பல்வேறு தொழிலாளர் சட்டங்களின் அமலாக்கம்

தொழிலாளர் சட்டங்களை அமலாக்கம் செய்வது தொழிலாளர் துறையின் முக்கியப் பணியாகும். இத்துறையில் உள்ள அமலாக்க அலுவலர்கள், தொழிலாளர் நலச் சட்டங்கள் மற்றும் எடையளவு சட்டங்கள் பின்பற்றப்படுவதை உறுதி செய்ய முறையான ஆய்வுகளும் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் சிறப்பாய்வுகளும் மேற்கொள்கின்றனர். இச்சட்டங்களின் நோக்கங்களை சம்பந்தப்பட்டவர்கள் கடைபிடிப்பதால் தொழிலாளர்கள் மற்றும் நுகர்வோரின் உரிமைகளை பாதுகாப்பது மற்றும் அவர்களது நலனை உறுதி செய்வது அமலாக்க அலுவலர்களின் தலையாய கடமையாகும்.

### ஒழுங்குமுறை சட்டங்களின் அமலாக்கம்

#### தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 1947

கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களின் பணி நிலைமைகளை முறைப்படுத்திட இச்சட்டம் வழிவகை செய்கிறது.

இத்துறையில் பராமரிக்கப்படும் பதிவேட்டின்படி இம்மாநிலத்தில் 3,27,381 கடைகள் மற்றும் நிறுவனங்கள் உள்ளன. 2014–2015ஆம் ஆண்டில் அமலாக்க அலுவலர்களால் 3,21,330 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றில் 28,738 முரண்பாடுகள் கண்டறியப்பட்டு இசைவு தீர்வாக முடிக்கப்பட்டு, இணக்கக் கட்டணத் தொகையாக ரூ.24.76 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. குற்றவியல் நீதிமன்றங்கள் மூலம் 1,192 வழக்குகள் முடிக்கப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம், 1958**

உணவு விடுதி மற்றும் உணவகங்கள் உட்பட பல்வேறு உணவு நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களின் பணியினை முறைப்படுத்திட இச்சட்டம் வழிவகை செய்கிறது. இம்மாநிலத்தில் 32,424 உணவு நிறுவனங்கள் உள்ளன. 2014–2015ஆம் ஆண்டில், உணவு நிறுவன வேலையளிப்பவர்களிடமிருந்து பதிவு, புதுப்பித்தல் மற்றும் திருத்தக் கட்டணமாக ரூ.21.90 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. இக்காலத்தில் 43,370 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 6,363

முரண்பாடுகள் கண்டறியப்பட்டு இசைவுதீர்வாக முடிக்கப்பட்டு, ரூ.5.73 இலட்சம் இணக்கக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது. குற்றவியல் நீதிமன்றங்கள் மூலம் 162 வழக்குகள் முடிக்கப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டம், 1958**

தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை நாட்களில் சம்பளத்துடன் கூடிய விடுமுறை அளித்திட இச்சட்டம் வழிவகை செய்கிறது. 2014–2015ஆம் ஆண்டில், 1,08,216 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றில் 8,845 முரண்பாடுகள் கண்டறியப்பட்டு இசைவு தீர்வாக முடிக்கப்பட்டு இணக்கக் கட்டணமாக ரூ.24.98 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. குற்றவியல் நீதிமன்றங்கள் மூலம் 378 வழக்குகள் முடிக்கப்பட்டன.

**மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம், 1961**

மோட்டார் போக்குவரத்து நிறுவன தொழிலாளர்களின் நலன்கள் மற்றும் பணி

நிபந்தனைகளை முறைப்படுத்த இச்சட்டம் வழிவகை செய்கிறது. பதிவு செய்யப்பட்ட 2,866 மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களில் 1,38,528 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர்.

2014–15ஆம் ஆண்டில் பதிவுக் கட்டணமாக ரூ.23.53 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. மேலும், இவ்வாண்டில், 6,193 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. முரண்பாடுகள் காணப்பட்ட 1,094 வழக்குகளில் இணக்கக் கட்டணமாக ரூ.2.83 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. பல்வேறு நீதிமன்றங்களில் 10 வழக்குகள் முடிக்கப்பட்டுள்ளன.

**தோட்டத் தொழிலாளர் சட்டம், 1951**

தோட்டத் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்கவும், பணி நிலைமைகளை முறைப்படுத்தவும் தோட்டத் தொழிலாளர் சட்டம் வகை செய்கிறது. இச்சட்டம், 5 ஹெக்டேர் மற்றும் அதற்கு மேற்பட்ட பரப்பளவு மற்றும் 15 தொழிலாளர்களுக்கு மேல்

பணிபுரியும் டீ, காபி, இரப்பர் மற்றும் ஏலக்காய் பயிரிடப்படும் தோட்ட நிறுவனங்களுக்கு பொருந்தும்.

உதகமண்டலம், குன்னூர், கூடலூர், பந்தலூர், கோத்தகிரி, வால்பாறை, ஏற்காடு, வத்தலக்குண்டு, தேனி மற்றும் நாகர்கோவிலில் உள்ள 10 தோட்ட நிறுவன ஆய்வர்கள் தோட்டத் தொழிலாளர் சட்டம் மற்றும் அதன் தொடர்புடைய விதிகளை அமல்படுத்துகின்றனர்.

தமிழ்நாட்டிலுள்ள மொத்த 2,223 தோட்ட நிறுவனங்களின் மொத்த பரப்பரளவு 62,474 ஹெக்டேர் ஆகும். இதில் 682 பதிவு பெற்ற தோட்ட நிறுவனங்களின் பரப்பளவு 54,798 ஹெக்டேர் ஆகும். பதிவு பெறாத 1,541 தோட்ட நிறுவனங்களின் பரப்பளவு 7,676 ஹெக்டேர் ஆகும். தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் 61,288 மொத்த தொழிலாளர்களில் 37,557 பெண்களும் மற்றும் 23,731 ஆண்களும் உள்ளனர்.

வேலையளிப்பவர்கள் / தோட்டத் நிறுவன உரிமையாளர்களால், தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி, மருத்துவ வசதி, குழந்தை காப்பகங்கள், கல்வி வசதி, குளிர்கால பாதுகாப்பு உடை, குடிநீர் வசதி ஆகிய

வசதிகள் வழங்கப்பட வேண்டும். 2014–2015–ஆம் ஆண்டில், 4,384 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில், 259 வழக்குகள் முடிக்கப்பட்டு, ரூ.3.63 இலட்சம் அபராதத் தொகை விதிக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (பணியாளர்களுக்கு நிரந்தரத் தகுதி வழங்கல்) சட்டம், 1981**

இச்சட்டம், 24 மாத காலத்தில், 480 நாட்கள் தொடர்ந்து ஒரு தொழில் நிறுவனத்தில் பணிபுரிந்த தொழிலாளிக்கு நிரந்தரத் தகுதி வழங்க வகை செய்கிறது. 2014–2015–ஆம் ஆண்டில், 3,575 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இச்சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட 118 மனுக்களின் மீது உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன.

**இதர ஒழுங்குமுறை சட்டங்கள்**

மேற்கூறப்பட்ட சட்டங்களுடன், கீழ்க்கண்ட முக்கிய தொழிலாளர் ஒழுங்குமுறை சட்டங்களும்

அமலாக்க அலுவலர்களால் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

1. ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970.
2. மாநிலம் விட்டு மாநிலம் இடம் பெயரும் தொழிலாளர்கள் (வேலை முறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) சட்டம், 1979.
3. உழைக்கும் பத்திரிக்கையாளர்கள் மற்றும் இதர பத்திரிக்கைத் தொழிலாளர்கள் (பணிநிபந்தனைகள் மற்றும் இதர பிரிவுகள்) சட்டம், 1955.

**ஊதியம் தொடர்புடைய சட்டங்கள்**

வேலையளிப்போர் தங்கள் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய ஊதியத்தை முறைப்படி வழங்கும் பொருட்டு கீழ்காணும் ஊதிய தொடர்புடைய சட்டங்கள் அமல்படுத்தப்பட்டு வருகின்றன.

1. சம்பளப் பட்டுவாடா சட்டம், 1936
2. குறைந்தபட்ச ஊதிய சட்டம், 1948
3. போனஸ் வழங்கல் சட்டம், 1965
4. சம ஊதியச் சட்டம், 1976

## சமூக பாதுகாப்பு சட்டங்கள்

### பணியாளர்கள் இழப்பீட்டுச் சட்டம், 1923

பணியில் இருக்கும் போது விபத்தின் காரணமாக ஏற்படும் மரணம் மற்றும் காயத்தினால் ஏற்படும் ஈட்டும் திறன் இழப்புக்கு ஏற்ப இழப்பீடு வழங்க இச்சட்டம் வழிவகை செய்கிறது.

இச்சட்டத்தின்படி உத்தரவிடப்படும் இழப்பீட்டுத் தொகை, வேலையளிப்பவர்களால் அல்லது காப்பீட்டு நிறுவனங்களால் வைப்பீடு செய்யப்படுகிறது. இழப்பீட்டுத் தொகை வைப்பீடு செய்யப்படாத நேர்வுகளில், வருவாய் வசூல் சட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சியர்கள் மூலம் இழப்பீட்டுத் தொகையினை வசூலிக்க பணியாளர் இழப்பீட்டு ஆணையர்கள் நடவடிக்கை மேற்கொள்கின்றனர்.

2014–2015–ஆம் ஆண்டில், 3,494 வழக்குகள் முடிக்கப்பட்டு, மனுதாரர்களுக்கு மொத்தம் ரூ.57.94 கோடி இழப்பீட்டுத் தொகை பட்டுவாடா செய்வதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

**பணிக்கொடை வழங்கல் சட்டம், 1972**

பணியாளர்களுக்கு பணிக்கொடை வழங்கிட இச்சட்டம் வழிவகை செய்கிறது. இச்சட்டப்படி 5 வருடத்திற்கு குறைவில்லாத தொடர் பணி முடித்த தொழிலாளி வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெறும் போதோ அல்லது பணியிலிருந்து விலகினாலோ, விபத்து மற்றும் நோயின் காரணமாக இறப்பு நேரிட்டாலோ அல்லது உடலுறுப்பு ஏதும் செயலிழந்தாலோ பணிக்கொடை வழங்கப்படுகிறது.

2014–2015–ஆம் ஆண்டில், 2,116 மனுக்கள் தீர்வு செய்யப்பட்டு, மொத்தம் ரூ.3.90 கோடி பணிக்கொடைத் தொகை வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. 538 மேல்முறையீட்டு மனுக்கள் விசாரித்து முடிக்கப்பட்டன.

**தமிழ்நாடு பிழைப்பூதியம் வழங்கல் சட்டம், 1981**

பணியிலிருக்கும்போது தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டு விசாரணை நிலுவையில் இருக்கும் தொழிலாளர்களுக்கு பிழைப்பூதியம் வழங்க இச்சட்டம்

வழிவகை செய்கிறது. 2014–2015–ஆம் ஆண்டில், இச்சட்டத்தின் கீழ் 177 மனுக்கள் முடிவு செய்யப்பட்டு, மொத்தம் ரூ.38.02 இலட்சம் பிழைப்பூதியமாக மனுதாரர்களுக்கு வழங்க உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. 45 மேல் முறையீட்டு மனுக்கள் விசாரித்து முடிக்கப்பட்டன.

**குழந்தைத் தொழிலாளர் முறை ஒழித்தல்**

பொருளாதார காரணங்களுக்காக குழந்தைகள் பணியில் ஈடுபடுத்தப்படும்பொழுது அது குழந்தைகளின் மனம் மற்றும் உடல் வளர்ச்சியை பாதிக்கிறது. குழந்தைகள் சிறு வயதிலேயே வேலைக்கு அமர்த்தப்படுவதால் அவர்களுக்கு கல்வி மறுக்கப்படுவதுடன், அவர்களது குழந்தை பருவமும் எதிர்காலமும் சிதைக்கப்பட்டு, ஒட்டுமொத்த சமூக வளர்ச்சியும் பாதிக்கப்படுகிறது. தமிழக அரசின் சீரிய முயற்சியினால், மாநிலத்தில் குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை வெகுவாக குறைந்துள்ளது. தமிழக அரசு குழந்தைத் தொழிலாளர்

முறையினை முற்றிலும் அகற்றிடும் நோக்கத்தில் பண்முக ஒருங்கிணைப்புடன் செயல்பட்டு பல்வேறு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

## குழந்தைத் தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1986

குழந்தைத் தொழிலாளர்கள் பணியமர்த்தப்படுவதை தடை செய்ய, குழந்தைத் தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், **1986** மற்றும் அதன் தொடர்புடைய சட்டங்களை தொழிலாளர் துறை மற்றும் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநரகம் அமலாக்கம் செய்து வருகிறது. குழந்தை தொழிலாளர் முறையை அடிமட்ட நிலையிலிருந்து நடவடிக்கை எடுக்கப்படாதவரை ஒழிப்பது இயலாது. எனவே, மாவட்ட அளவில் சட்ட அமலாக்கத்தை வலுப்படுத்துவதற்காக, மாவட்ட ஆட்சியரின் தலைமையில் தடுப்புப் படைகள் அனைத்து மாவட்டங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**சட்ட அமலாக்கம்**

குழந்தைத் தொழிலாளர்களைப் பணியமர்த்துவதைத் தடை செய்யும் கீழ்குறிப்பிட்ட சட்டங்கள் தொழிலாளர் துறை மற்றும் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலர்களால் அமலாக்கம் செய்யப்படுகின்றன.

1. தொழிற்சாலைகள் சட்டம், 1948.
2. மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம், 1961.
3. பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம், 1966.
4. தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 1947.
5. தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம், 1958.
6. தோட்ட தொழிலாளர் சட்டம், 1951.

2014–2015-ஆம் ஆண்டில் பல்வேறு சட்டங்களின் கீழ் 1,50,055 தொழில் நிறுவனங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, காணப்பட்ட முரண்பாடுகளுக்கு குற்றவியல் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

**குழந்தை தொழிலாளர் நிலை**

தமிழகத்தில், மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 2001–ஆம் ஆண்டில் 4.19 இலட்சம் என்றும், 2011-ஆம் ஆண்டில் 1.51 இலட்சம் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. அரசு மேற்கொண்ட பல்வேறு சீரிய சட்ட அமலாக்க நடவடிக்கைகள், மறுவாழ்வு மற்றும் வளர்ச்சி திட்டங்களின் காரணமாக குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை தொடர்ந்து குறைந்து கொண்டே வருகிறது. பொருளாதார கட்டாயத்தினால் பள்ளிக்கு செல்லாமல் பணிக்கு செல்லும் குழந்தைகளின் எண்ணிக்கை 29,656 என, 2012–13–ஆம் ஆண்டில் அனைவருக்கும் கல்வித் திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்**

பொதுமக்களிடையே குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிராக விழிப்புணர்வினை ஏற்படுத்திடும் வண்ணம், ஒவ்வொரு வருடமும் ஜூன் 12-ஆம் தேதி

உலக குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினமாக மாநிலம் மற்றும் மாவட்ட அளவில் அனுசரிக்கப்பட்டு வருகிறது. மாநில மற்றும் மாவட்ட அளவில் கண்காட்சிகள் மற்றும் பொது நிகழ்ச்சிகள் மூலம் குழந்தை தொழிலாளர் முறை ஒழித்தல் குறித்த விழிப்புணர்வு பங்குதாரர்களுக்கு ஏற்படுத்தப்பட்டு, அவர்களது பங்களிப்பு குழந்தை தொழிலாளர் முறை ஒழிப்பதற்கு கோரப்படுகிறது. தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்புப் பயிற்சி மையங்களில் பயின்று முறையான பள்ளிகளில் சேர்க்கப்பட்டு, 10–ம் மற்றும் 12–ம் வகுப்பு பொது தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படுகின்றன. தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் செயல்படும் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் சிறப்பாக பணியாற்றிய ஒரு ஆசிரியர், ஒரு தொழிலாளர் ஆய்வர், ஒரு தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக துணை இயக்குநர், ஒரு தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட இயக்குநர் மற்றும் இரண்டு களப் பணியாளர்களுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன.

**தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம்**

தமிழகத்தில், சென்னை, கோயம்புத்தூர், திண்டுக்கல், தர்மபுரி, ஈரோடு, கிருஷ்ணகிரி, காஞ்சிபுரம், நாமக்கல், தூத்துக்குடி, திருநெல்வேலி, திருச்சி, திருவண்ணாமலை, சேலம், வேலூர் மற்றும் விருதுநகர் ஆகிய **15** மாவட்டங்களில் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் செயல்பட்டு வருகிறது. **31.03.2015** அன்றுள்ளபடி, **259** தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்பு பயிற்சி மையங்களில் **10,832** மீட்கப்பட்ட மற்றும் பள்ளி செல்லா குழந்தைகள் கல்வி பயில்கின்றனர். இத்திட்டம் துவங்கப்பட்ட நாளிலிருந்து இதுவரை **98,155** குழந்தைகள் முறையான பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்தின் கீழ் பயிலும் குழந்தைகளுக்கு மாதந்தோறும் ரூ.150/- உதவி தொகை, கல்வி உபகரணங்கள் மற்றும் இலவச மருத்துவ பரிசோதனை அளிக்கப்படுகிறது.

**சேலம் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் ஒருங்கிணைந்த குழந்தைகள பாதுகாப்பு திட்டம்:**

'ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்' தருமபுரி மற்றும் சேலம் மாவட்டங்களில் பருத்தி விதை மற்றும் பருத்தி தொழிலில் ஈடுபடும் குழந்தைகளின் வாழ்க்கை தரத்தை முன்னேற்றிட யுனிசெப் நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கிராம குழந்தைகள் நேய திட்டத்தினை வடிவமைக்கும் முகாம்கள் **511** கிராம ஊராட்சிகளில் நடத்தப்பட்டன. மேலும், குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாக்க கிராம அளவில் குழுக்கள் உருவாக்கப்பட்டு மாதாந்திர கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

**குழந்தை தொழிலாளர்களுக்கான பயன்கள் மற்றும் நலத்திட்டங்கள்**

அரசின் முறையான பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளான விலையில்லா சீருடைகள், பாட புத்தகங்கள், புத்தக பை, விளக்கப்படங்கள், பூலோக வரைபடங்கள், கணித

உபகரண பெட்டி, கிரேயான்ஸ், காலணிகள், இலவசப் பேருந்து பயண அட்டை மற்றும் வாரம் 5 முட்டையுடன் கூடிய மதிய உணவு ஆகியவற்றை தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்புப் பயிற்சி மையங்களில் பயிலும் மாணவர்களுக்கும் தமிழக அரசு வழங்கி வருகிறது. மேற்படிப்பு பயின்று வரும் முன்னாள் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்புப்பயிற்சி மைய மாணவர்கள் அனைவருக்கும் மாதந்தோறும் தலா ரூ.500/- உதவித்தொகையாக அவர்களது கல்வி காலம் முடியும் வரை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், 2014-2015-ஆம் கல்வியாண்டில் 1008 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். தற்போது, இம்மாணவர்களில் 100-க்கும் மேற்பட்டவர்கள் பொறியியல் கல்லூரிகளிலும், 3 மாணவர்கள் மருத்துவ கல்லூரிகளிலும் பயின்று வருகின்றனர்.

**பீடித் தொழிலாளர்கள் நலன்**

தமிழ்நாட்டில் சுமார் 2.40 இலட்சம் பீடி தொழிலாளர்கள் உள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. பீடித் தொழிலாளர்கள் தங்களுக்கென சொந்தமாக வீடு

கட்டிக்கொள்ளும் வகையில் மத்திய அரசு திருத்திய ஒருங்கிணைந்த வீட்டு வசதி திட்டம் 2007–ஐ நடைமுறைபடுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ், ஒரு வீட்டின் மொத்த கட்டுமான செலவு ரூ.45,000/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் மத்திய அரசு மானியமாக ரூ.40,000/-ம் பயனாளியின் பங்கான ரூ.5,000/–ஐ மாநில அரசு மானியமாக வழங்கி வருகின்றன. தமிழ்நாடு அரசு இத்திட்டத்தின் கீழ், ஒரு வீட்டிற்கு ஆகும் கட்டுமான செலவினை ரூ.45,000/-லிருந்து ரூ.1.00 இலட்சமாகவும், மாநில அரசின் மானியத்தினை ரூ.60,000/-மாகவும் உயர்த்தியுள்ளது.

## தொழிலாளர் நல வாரியங்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு திட்டங்கள்

### தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்

தமிழ்நாடு தொழிலாளர் நல நிதி சட்டம் 1972–ன் கீழ் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் 1975 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. அமைப்பு சார்ந்த தொழிலாளர்களுக்கு பல்வேறு நலத் திட்டங்களை

இவ்வாரியம் செயல்படுத்தி வருகிறது. தொழிலாளர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்துவதற்காக, தொழிற்சாலைகள், தோட்ட நிறுவனங்கள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், கடைகள், உணவு நிறுவனங்கள் மற்றும் இதர நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள், அவர்தம் வேலையளிப்பவர்கள் ஆகியோரிடமிருந்து தொழிலாளர் நல நிதியை தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் பெறுகிறது. ஒவ்வொரு தொழிலாளியின் ஆண்டு பங்குத் தொகையாக தற்போதுள்ள ரூ.7/–ஐ ரூ.10/–ஆகவும், வேலையளிப்பவரின் பங்குத் தொகையான ரூ.14/–ஐ ரூ.20/– ஆகவும், அரசின் பங்குத் தொகையான ரூ.7/–ஐ ரூ.10/– ஆகவும் ஜனவரி 2015ஆம் ஆண்டு முதல் தொழிலாளர் நல நிதியாக உயர்த்தப்பட்டுள்ளது. இது தவிர, நிறுவனங்களிடமிருந்து நீதிமன்றத்தால் விதிக்கப்படும் அபராதத் தொகை மற்றும் பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்கள் மற்றும் விதிகளை மீறியமைக்காக நிறுவனங்களிடமிருந்து தொழிலாளர் துறையின் அமலாக்க அதிகாரிகளால் வசூலிக்கப்படும்

இணைக்கக் கட்டணமும் வாரியத்தில் நல நிதியாகப் பெறப்படுகிறது.

வாரியம், சந்தாதாரர்களின் நலனுக்காக பாலர் பள்ளி, தையற்பயிற்சி மற்றும் படிப்பகங்கள் ஆகிய வசதிகளை 57 நல மையங்களில் செயல்படுத்தி வருகிறது. 2014–2015–ஆம் ஆண்டில் 17,229 தொழிலாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்கள் ரூ.1.02 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை பெற்றுள்ளனர்.

மேலும், கல்வி உதவித் தொகை, அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கான கல்வி ஊக்கத் தொகை, பாடநூல் உதவித் தொகை, அடிப்படை கணினி பயிற்சி, திருமணம், மூக்குக் கண்ணாடி, தட்டச்சு / சுருக்கெழுத்து, காதுகேட்கும் கருவி, செயற்கை உறுப்பு, மூன்று சக்கர வாகனம், இயற்கை மரணம், விபத்து மரணம் மற்றும் ஈமச்சடங்கு ஆகியவைகளுக்கு உதவித் தொகைகள் இவ்வாரியத்தால் வழங்கப்பட்டு வருகிறது. இத்துடன், காசநோய்க்கான சிறப்பு சிகிச்சை பிரிவுகள், தொழிலாளர்களுக்கென விடுமுறை இல்லங்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கென ஓய்வு இல்லம்

போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வேலையளிப்போர் மற்றும் தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் ‘‘உழைப்பவர் உலகம்’’ என்ற மாதாந்திர பத்திரிக்கையும் வெளியிடப்பட்டு வருகிறது.

**அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்கள்**

அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பு வழங்குவதில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலம் என்பதற்கேற்ப, பிற மாநிலங்களுக்கு முன்னதாக தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டத்தினை 1982–ஆம் ஆண்டிலேயே இயற்றியுள்ளது. இச்சட்டத்தின் கீழ், 69 தொழில் இனங்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்கு ஏதுவாக சமூக பாதுகாப்பு நலத் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. கல்வி, திருமணம், மகப்பேறு, இயற்கை மரணம், விபத்து மரணம், ஈமச் சடங்கு, விபத்து ஊனம் மற்றும் முதியோர் மாதாந்திர ஓய்வூதியம் ஆகிய நலத் திட்ட உதவிகள் வழங்கிட இத்திட்டம் வழிவகை செய்கிறது.

இதுவரை கீழ்க்கண்ட 17 அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களை அரசு தோற்றுவித்துள்ளது.

| வ. எண் | வாரியங்களின் பெயர் |
|---|---|
| 1. | தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 2. | தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம் |
| 3. | தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியம் |
| 4. | தமிழ்நாடு தையல் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 5. | தமிழ்நாடு முடிதிருத்துவோர் நல வாரியம் |
| 6. | தமிழ்நாடு சலவைத் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 7. | தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 8. | தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 9. | தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெய்யும் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 10. | தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடும் தொழிலாளர்கள் நல |
| 11. | தமிழ்நாடு ஓவியர்கள் நல வாரியம் |
| 12. | தமிழ்நாடு பொற்கொல்லர்கள் நல வாரியம் |

| | |
|---|---|
| 13. | தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 14. | தமிழ்நாடு வீட்டுப் பணியாளர்கள் நல வாரியம் |
| 15. | தமிழ்நாடு விசைத்தறி நெசவாளர்கள் நல வாரியம். |
| 16. | தமிழ்நாடு பாதையோர வணிகர்கள் மற்றும் கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் |
| 17. | தமிழ்நாடு சமையல் தொழிலாளர்கள் நல வாரியம் |

**திட்டங்களின் நிர்வாகச் செயல்பாடுகள்**

அமைப்புசாரா நல வாரியங்களில் பதிவு, புதுப்பித்தல், கேட்பு மனு பரிசீலனை மற்றும் உதவித்தொகைகள் வழங்குதல் ஆகிய பணிகள் பரவலாக்கப்பட்டு அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட தொழிலாளர் அலுவலர்களால் (சமூக பாதுகாப்பு திட்டம்) செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மாவட்ட ஆட்சியரின் தலைமையிலான மாவட்ட கண்காணிப்பு குழு மாவட்ட அலுவலக செயல்பாடுகளை கண்காணிப்பதன் மூலமாக நலத்திட்ட உதவிகள் தொழிலாளர்களுக்கு விரைவில் சென்றடைவதை உறுதி செய்கிறது.

மாவட்ட தொழிலாளர் அலுவலர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) அலுவலகங்கள் மற்றும் நல வாரியங்களின் தலைமை அலுவலகங்களின் பணிகள் கணினி மயமாக்கப்பட்டுள்ளன. மேலும், பதிவு மற்றும் பதிவினை புதுப்பிக்கும் நேர்வில் தொழிலாளர்களின் புகைப்படம் மற்றும் அவர்களின் விவரங்கள் இணையதள மென்பொருள் மூலம் ஒருங்கிணைத்து அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு புதிய அடையாள அட்டைகள் 01.09.2014 முதல் வழங்கப்படுகின்றன.

அனைத்து நலத் திட்ட உதவிகளும் மின்னணு பரிமாற்றம் மூலம் பயனாளிகளின் வங்கி கணக்கிற்கு நேரடியாக செலுத்தப்படுகிறது.

**நிதி ஆதாரங்கள்**

கட்டடம் மற்றும் கட்டுமான பணியின் மொத்த கட்டுமான மதிப்பீட்டில் 1□ பங்களிப்புத் தொகையாக தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியத்தால் பெறப்படுகிறது. 2014–2015–ம் ஆண்டில் ரூ.300.74 கோடி பங்களிப்பு தொகையாக பெறப்பட்டுள்ளது.

சாலைகளில் பயணிகள் அல்லது பொருட்களை ஏற்றி செல்லும் வணிக வாகனங்களின் உரிமையாளர் களிடமிருந்து, தமிழ்நாடு மோட்டார் வாகன வரி விதிப்புச் சட்டம் **1974**–ன்படி கூடுதலாக வசூலிக்கப்படும் **1□** மோட்டார் வாகன வரியினை நிதியாக தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நலவாரியம் பெறுகிறது. **2014–2015**–ம் ஆண்டில் ரூ.**11.63** கோடி வரியாக பெறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர **14** நல வாரியங்களுக்கு நலத் திட்டங்களை செயல்படுத்துவதற்கு தமிழக அரசு மானியம் வழங்குகிறது. **2014–2015**–ம் ஆண்டிற்கான வரவு செலவு மதிப்பீட்டில் ரூ.**90** கோடியை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

**நலத்திட்டங்களின் கீழ் வழங்கப்படும் உதவித்தொகைகள்**

பதிவு பெற்ற அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு பின்வரும் நலத் திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன.

| வ. எண் | உதவித்தொகைகள் | தொகை (ரூ) |
|---|---|---|
| 1. | விபத்து நிவாரணத் திட்டம் | |
| | அ) விபத்து மரணம்<br>ஆ) விபத்து ஊனம் (ஊனத்தின் தன்மைக்கேற்ப)<br>இ) செயற்கை உறுப்புகள் மற்றும் சக்கர நாற்காலி<br><br>ஈ) விபத்து மரணம் (தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்திற்கு மட்டும்) | 1,00,000/–<br>1,00,000/– வரை<br>மாற்றுத் திறனாளிகள் நல வாரியம் நிர்ணயிக்கும் தொகை<br>ரூ.5,00,000/– (பணியிடங்களில் பணியில் ஈடுபட்டிருக்கும் போது ஏற்படும் விபத்தால் மரணம்) |
| 2. | இயற்கை மரண உதவித்தொகை | 15,000/– |
| 3. | ஈமச்சடங்கு உதவித்தொகை | 2,000/– |
| 4. | கல்வி உதவித் தொகை<br>அ) 10ம் வகுப்பு படிப்பதற்கு (பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | 1,000/– |

| | | | |
|---|---|---|---|
| | ஆ) | 10ம் வகுப்பு தேர்ச்சி | 1,000/– |
| | இ) | 11ம் வகுப்பு படிப்பதற்கு<br>(பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | 1,000/– |
| | ஈ) | 12ம் வகுப்பு படிப்பதற்கு<br>(பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | 1,500/– |
| | உ) | 12ம் வகுப்பு தேர்ச்சி | 1,500/– |
| | ஊ) | முறையான பட்டப்படிப்பு<br>விடுதியில் தங்கிப் படித்தல் | 1,500/–<br>1,750/– |
| | எ) | முறையான பட்டமேற்படிப்பு<br>விடுதியில் தங்கிப் படித்தல் | 4,000/–<br>5,000/– |
| | ஏ) | தொழில் நுட்பப் பட்டப்படிப்பு<br>விடுதியில் தங்கிப் படித்தல் | 4,000/–<br>6,000/– |
| | ஐ) | தொழில்நுட்பப் பட்டமேற்படிப்பு<br>விடுதியில் தங்கிப் படித்தல் | 6,000/–<br>8,000/– |
| | ஒ) | ஐ.டி.ஐ. அல்லது பாலிடெக்னிக் படிப்பு<br>விடுதியில் தங்கிப் படித்தல் | 1,000/–<br>1,200/– |
| 5. | திருமண உதவித்தொகை<br>அ) ஆண்<br>ஆ) பெண் | | <br>3,000/–<br>5,000/– |
| 6. | மகப்பேறு உதவித்தொகை<br>மருத்துவ ரீதியிலானகருக்கலைப்பு / கருச்சிதைவு | | 6,000/–<br>3,000/– |
| 7. | கண் கண்ணாடி வாங்கிட உதவித் தொகை | | 500/–வரை |

| | | |
|---|---|---|
| 8. | ஓய்வூதியம் | 1000/–பிரதி மாதம் |
| 9. | குடும்ப ஓய்வூதியம் (தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்திற்கு மட்டும்) | 400/–பிரதி மாதம். |

**நல வாரியங்களின் செயல்பாடு**

2014–2015–ஆம் ஆண்டில் பதிவு, பயனாளிகள் மற்றும் உதவித் தொகை வழங்கப்பட்ட விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| நல வாரியத்தின் பெயர் | பதிவு பெற்ற தொழிலாளர்கள் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட உதவித் தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் | 87,312 | 1,36,413 | 43.90 |
| தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர 15 வாரியங்கள் | 1,70,426 | 3,55,123 | 87.36 |
| மொத்தம் | 2,57,738 | 4,91,536 | 131.26 |

## நுகர்வோர் பாதுகாப்பு

### சட்டமுறை எடையளவுச் சட்டம், 2009

நுகர்வோர் பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டு சட்டமுறை எடையளவுச் சட்டம், 2009 மற்றும் சட்டமுறை எடையளவு (பொட்டலப் பொருட்கள்) விதிகள், 2011 உருவாக்கப்பட்டு எடை மற்றும் அளவைகளின் தரத்தை உறுதி செய்கிறது. இச்சட்டத்தால் வணிகம் மற்றும் வியாபார நிறுவனங்களில் உள்ள எடைகள், அளவைகள் மற்றும் எண்ணிக்கை வாயிலாக விற்கப்படும்/பகிர்ந்தளிக்கப்படும் இதர பொருட்கள் முறைப்படுத்தப்படுகிறது.

2014–2015–ஆம் ஆண்டில், ரூ.1.44 இலட்சம் உரிமக் கட்டணமாகவும், ரூ.23.48 கோடி முத்திரை கட்டணமாகவும் பெறப்பட்டுள்ளது. இவ்வாண்டில் 3,38,463 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 13,326 பல்வேறு முரன்பாடுகள் காணப்பட்டு ரூ.1.21 கோடி இசைவுத் தீர்வுக் கட்டணமாக பெறப்பட்டது.

**சட்டமுறை எடையளவு (பொட்டலப் பொருட்கள்) விதிகள், 2011**

2014–2015–ஆம் ஆண்டில், பொட்டலப் பொருட்களுக்கு பதிவுக் கட்டணமாக ரூ.2.23 இலட்சம் பெறப்பட்டுள்ளது. இவ்வாண்டில் 1,42,145 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு 4,105 முரண்பாடுகள் கண்டறியப்பட்டு ரூ.89.51 இலட்சம் இணக்கக்கட்டணமாக விதிக்கப்பட்டது.

## தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம்

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் 1973–ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு 1988–ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையம் அரசின் வருட மானியமாக ரூ.1.60 கோடி பெற்று இயங்கி வருகிறது. இக்கல்வி நிலையம், பட்டபடிப்புகளையும் தொழிலாளர் மேலாண்மையியலில் பல்வேறு பயிற்சிகளையும் நடத்தி வருகிறது.

இக்கல்வி நிலையம் சென்னை பல்கலை கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட இளங்கலை பட்டபடிப்பு (தொழிலாளர் மேலாண்மை), முதுகலை பட்டபடிப்பு (தொழிலாளர் மேலாண்மை) மற்றும் ஆராய்ச்சி படிப்பு நடத்தி வருகிறது. பணிபுரிவோருக்காக, ஓராண்டு பகுதி நேர தொழிலாளர் நிர்வாகத்தில் முதுநிலை பட்டயப்படிப்பும், தொழிலாளர் சட்டங்களும் நிர்வாகவியல் சட்டங்களும் என்ற ஓராண்டு பகுதிநேர பட்டயப்படிப்பும், திறன்மிகு வகுப்பறைகளில் நடத்தப்பட்டு வருகிறது. இக்கல்வி நிலையத்தில் பயின்ற மாணவர்கள் தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் மனிதவள மேம்பாட்டு உயர் அலுவலராக பணியமர்த்தப்பட்டுள்ளனர். 2014–2015–ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தில் 260 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இக்கல்வி நிலையம் நடத்திய 30 கருத்தரங்குகள் / பயிற்சி வகுப்புகள் வாயிலாக 2,628 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

## தமிழ்நாடு கட்டுமானக் கழகம்

தமிழ்நாடு கட்டுமானக் கழகம், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் நிதியைக்

கொண்டு கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கும் அவர்களின் குழந்தைகளுக்கும் இலவச திறன் பயிற்சி அளிக்கும் பொருட்டு **04.01.2013** அன்று நிறுவப்பட்டது. இந்நிறுவனம் **668** நபர்களுக்கு திறன் மிகு பயிற்சி அளித்துள்ளது.

**சிறப்பு செயலாக்கம்**

- பதிவு பெற்ற அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கான நல திட்ட பயன்கள் நவம்பர் **2011**–ஆம் ஆண்டு முதல் பயனாளிகளின் வங்கி கணக்கிற்கு மின்னணு பரிவர்த்தனை மூலம் வழங்கப்பட்டு வருகிறது.
- **2014**–ஆம் ஆண்டு முதல் இணையதள புகைப்பட கருவி மூலம் தொழிலாளர்களின் புகைப்படம் எடுக்கப்பட்டு அப்புகைப்படத்துடன் கூடிய ஏனைய விபரங்கள் அடங்கிய புதிய அடையாள அட்டை அன்றைய தினமே வழங்கப்பட்டு வருகிறது.
- **60** வயது பூர்த்தியடைந்த **17** அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மாத

ஒய்வூதியத்தினை ரூ.500/—லிருந்து ரூ.1,000/—மாக உயர்த்தி வழங்க டிசம்பர் 2011 ஆம் ஆண்டில் அரசு ஆணையிட்டது. இதன் மூலம் 31.03.2015 வரை 33,074 பயனாளிகள் பயன் பெற்றுள்ளனர்.

- அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு பெற்ற தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு உயர் கல்வி பயில்வதற்காக வழங்கப்பட்டு வந்த கல்வி உதவித் தொகையுடன் கூடுதலாக ரூ.2,000/— உயர்த்தி வழங்க மார்ச்—2013—ல் அரசு ஆணையிட்டது. இதனால் 1,91,239 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

- கட்டடம் மற்றும் கட்டுமான நிறுவனங்களிடமிருந்து தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியத்திற்கு பெறப்படும் பங்களிப்புத் தொகை 0.3 சதவீதத்திலிருந்து (cess) 1 சதவீதமாக 17.12.2013 முதல் உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது.

- வெளிமாநில தொழிலாளர்கள் (Inter- State Migrant Workers) குறித்த தகவல்களை கணக்கெடுக்கும் பணி துவங்கப்பட்டு, வெளிமாநில கட்டுமானத்

தொழிலாளர்களை கண்டறிந்து அவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- அமைப்புசாரா தொழிலாளர்கள் தங்களது உறுப்பினர் பதிவினை புதுப்பிப்பதற்கான தற்போதுள்ள இரண்டாண்டு கால வரம்பினை ஐந்து ஆண்டுகளாக உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது.

- பணியின் போது பணியிடத்தில் ஏற்படும் விபத்தினால் இறக்கும் கட்டுமான தொழிலாளரின் நியமனதாரர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் நிதி உதவி ரூபாய் ஒரு லட்சத்தினை ஐந்து லட்சமாக உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது.

- 17 அமைப்புசாரா நல வாரியங்களில் **16.05.2011** முதல் **31.03.2015** வரையிலான காலத்தில் **11,40,578** தொழிலாளர்கள் புதிதாக பதிவு செய்யப்பட்டு, **17,94,088** பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்டங்களின் கீழ் மொத்தம் ரூ.**442.39** கோடி உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தால் பெறப்படும் நல நிதி, தொழிலாளர் மற்றும் வேலையளிப்போர் பங்கு தொகை முறையே ரூ.7/–லிருந்து ரூ.10/–ஆகவும் ரூ.14/–லிருந்து ரூ.20/–ஆகவும் ஜனவரி–2015–முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

- 2013–ஆம் ஆண்டில் சிறப்பு செயலாக்கமாக தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் அமைப்புரீதியான தொழிலாளர்களுக்கு, விபத்து இறப்பு உதவி தொகை ரூ.1 இலட்சம், தேசிய மற்றும் மாநில அளவில் விளையாட்டு போட்டிகளில் பங்கேற்கும் மாணவர்களுக்கு அவர்களது திறமையின் அடிப்படையில் உதவி மற்றும் கணிணி, உணவு நிறுவன மேலாண்மை மற்றும் ஓட்டுநர் பயிற்சி ஆகியவை குறுகிய கால திறனெய்தும் பயிற்சி திட்டத்தின் கீழ் (Modular Employable Skill) வழங்கப்படுகின்றன.

- இந்த அரசு பீடித் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக்கொள்ள வழங்கும் பங்குத் தொகையினை ரூ.5,000/–லிருந்து ரூ.60,000/–மாக உயர்த்தியுள்ளது.

- ❖ தொழிலாளர்கள் நலன் கருதி வேலூரில் தொழிலாளர் துணை ஆணையர் அலுவலகம் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது.
- ❖ 2012–ம் ஆண்டில் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட பள்ளிகளில் பயின்று தற்போது மேல்படிப்பு படிக்கும் முன்னாள் மாணவர்களுக்கான மாதாந்திர உதவித்தொகை ரூ.250/–லிருந்து ரூ.500/– ஆக தற்போது உயர்த்தப்பட்டு அவர்களது கல்வி காலம் முழுமைக்கும் அரசால் வழங்கப்படுகிறது.
- ❖ சென்னையில் அகில இந்திய தொழில் மற்றும் சுற்றுலா பொருட்காட்சியில் குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. ஜனவரி 2015ல் நடைபெற்ற பொருட்காட்சியில், குழந்தை தொழிலாளர் முறை ஒழிப்பு குறித்த உறுதிமொழியினை ஏற்று 64,563 பார்வையாளர்கள் கையெழுத்திட்டுள்ளனர்.

*****

## 11. தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம்

தமிழ்நாடு, பொருளாதார வளர்ச்சியிலும், தொழில் வளர்ச்சியிலும் இந்தியாவில் ஒரு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. இத்தகைய அபரிமிதமான வளர்ச்சி நமது மாநிலத்தில் கல்வியறிவு பெற்ற திறமையான தொழிலாளர்கள் அதிக எண்ணிக்கையில் இருப்பதனாலும், சிறப்பான கட்டமைப்பு வசதிகளினாலும் எய்தப்பட்டுள்ளது. தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம், தொழிற்சாலைகளில் அமைதியை உறுதி செய்வதில் ஒரு அச்சாணியாக திகழ்ந்து வருகிறது. தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் இதர தொழிலாளர் நலச்சட்டங்களை நடைமுறைக்கு சாத்தியமான முறையில் அமலாக்கம் செய்வதாலும், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரமான சூழ்நிலை நிலவி வருவதாலும் அதிக எண்ணிக்கையில் பன்னாட்டு நிறுவனங்கள் நமது மாநிலத்தில் தொழிற்சாலைகளை நிறுவி வருகின்றனர்.

தமிழ்நாட்டில் 31.03.2015 அன்றுள்ளவாறு 43,576 தொழிற்சாலைகள், தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு அதில் 19,37,084

தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். தமிழ்நாட்டில் தொழில் உற்பத்தி அமைப்பில், பல்வேறு விதமான உற்பத்தி செயல்முறைகள் கொண்ட தானியங்கி வாகனம், இரசாயனம், பஞ்சாலை, தோல் பொருட்கள், மின்னணுவியல், பட்டாசு மற்றும் தீப்பெட்டி, சிமெண்ட் மற்றும் பொறியியல் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. இத்தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பு சுகாதார மற்றும் நலன்களை நடைமுறைப்படுத்த இவ்வியக்ககம் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது.

இவ்வியக்ககம் தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் இதர தொழிலாளர் நலச் சட்டங்கள் மற்றும் கட்டுமான தொழிலாளர் சட்டம் ஆகியவற்றை முறையே தொழிற்சாலைகள் மற்றும் கட்டுமானப் பணியிடங்களில், பாதுகாப்பு மற்றும் சுகாதார வழிமுறைகளை சிறப்பான முறையில் அமலாக்கம் செய்து தொழிலாளர்களின் நலனை காத்து வருகிறது. தொழிலகப் பாதுகாப்பு மற்றும்

சுகாதார இயக்ககத்தால் கீழ்க்கண்ட செயல்பாடுகள் விரிவான வகையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:-

1. தொழிற்சாலைகளில் தொழிலாளர் சட்ட அமலாக்கம்.
2. கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர் சட்ட அமலாக்கம்.
3. தொழிற்சாலைகள் மற்றும் கட்டுமான பணியிடங்களில் பணிபுரியும் தொழிலாளர்களது உடல்நலம், பாதுகாப்பு, பயிற்சி மற்றும் மேம்பாட்டு செயல்பாடுகள்.

**தொழிற்சாலைகளில் தொழிலாளர் சட்ட அமலாக்கம்**

தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ளவாறு பல்வேறு நல வசதிகள் இவ்வியக்கக அலுவலர்களால் காலமுறைப்படி ஆய்வுகள் மேற்கொண்டு உறுதிசெய்யப்படுகின்றன.

தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளின் கால அளவினை குறைத்து, ஆய்வுகளின் தரத்தினை மேம்படுத்தி, அதன் மூலம் தொழில்

முனைவோர், உற்பத்தி மற்றும் விற்பனை பணிகளில் முழுக்கவனம் செலுத்த ஏதுவாக, இவ்வியக்கக அலுவலர்களால் கீழ்க்கண்ட காலமுறைப்படி ஆய்வுகள் மேற்கொள்ளப்பபடுகின்றன:-

(அ) அபாய செயல்முறைகள் இல்லாத சிறு தொழில் நிறுவன சான்று பெற்ற தொழிற்சாலைகள், தொழிலாளர் மற்றும் தொழிற்சங்கங்களிடமிருந்து புகார்கள் ஏதும் இல்லாத நிலையிலும், விபத்துக்கள் ஏதும் ஏற்படாத நிலையிலும் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படுகின்றன.

(ஆ) சிறு தொழில் நிறுவன சான்று பெற்ற அபாய செயல்முறைகள் அடங்கிய தொழிற்சாலைகள் மற்றும் சிறு தொழில் நிறுவன சான்று பெறாத தொழிற்சாலைகள் ஆகியவற்றில் பணிபுரியும் தொழிலாளர்களின் உடல் நலம், பாதுகாப்பு மற்றும் நல வசதிகளை உறுதி செய்யும் பொருட்டு இத்தொழிற்சாலைகள் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படுகின்றன.

(இ) தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் நிகழக்கூடிய தீ மற்றும் வெடி விபத்துகளை குறைக்கும் வகையிலும் குழந்தைத் தொழிலாளர்கள் பணியமர்த்தப்படுவதை தவிர்க்கவும், இத்தொழிற்சாலைகள் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படுகின்றன.

(ஈ) மேலும், பாதுகாப்பு, உடல் நலம் மற்றும் நல வசதிகள் ஏற்பாடு செய்துள்ளது குறித்து, கண்காணிப்பு மேற்கொள்ள சிறப்பு ஆய்வுகள், விடுமுறை நாள் ஆய்வுகள் மற்றும் சோதனை ஆய்வுகள் கூடுதலாக மேற்கொள்ளப்படுகின்றன.

**2014–2015–**ஆம் ஆண்டில் காலத்தில் இவ்வியக்கக அலுவலர்களால் **39,545** ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, பாதுகாப்பு மற்றும் தொழிலாளர்கள் நலன்கள் உறுதி செய்யப்படுகின்றன.

## பட்டாசுத் தொழிற்சாலை ஆய்வுகள்

பட்டாசுத் தொழிற்சாலைகளில் குறிப்பாக பண்டிகைகளை ஒட்டிய காலகட்டங்களில் அதிக உற்பத்திச் செயல்பாடுகளின் காரணமாக பாதுகாப்பான பணிநிலையையும் மற்றும் பாதுகாப்பான வேலைமுறையையும் கண்காணிப்பதற்கு ஒவ்வொரு வருடமும் வருவாய், காவல் மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்பு பணி துறை ஆகிய துறைகளின் அலுவலர்களோடு இணைந்து சிறப்புக்குழுக்கள் அமைக்கப்படுகின்றன. இக்குழுக்களால் பட்டாசுகள் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படும் பண்டிகை ஒட்டிய காலக் கட்டங்களில் திடீர் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இக்குழுக்களின் ஆய்வுப்பணி, ஆய்வு மேற்கொள்ளப்படும் தேதியன்று தான் தீர்மானிக்கப்படும். இக்குழுக்களின் ஆய்வுகளின் போது தொழிற்சாலைகள் நிர்வாகத்தினரால் பாதுகாப்பு வழிமுறைகள் சரியாக கடைபிடிப்பது குறித்து தீவிரமாக கண்காணிக்கப்படுகிறது. 2014–2015–ஆம் ஆண்டில் 763 குழு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**நடமாடும் கண்காணிப்புக் குழு**

பட்டாசு தொழிற்சாலைகளில் திடீர் ஆய்வு செய்யவும், அங்குள்ள தொழிலாளர்களது பாதுகாப்பு மற்றும் உடல்நல வசதிகளை தொடர்ந்து கண்காணிக்கவும், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார கூடுதல் இயக்குநர் தலைமையில், ஒரு நடமாடும் கண்காணிப்புக் குழு 03.01.2013 முதல் விருதுநகர் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு பட்டாசு தொழிற்சாலைகளில் விபத்துக்கள் ஏற்படாவண்ணம், பாதுகாப்பு வழிமுறைகளை கடைபிடிப்பது குறித்து தொழிலாளர்கள் மற்றும் நிர்வாகத்தினருக்கு எடுத்துரைத்து விழிப்புணர்வை ஏற்படுத்தும். 2014–2015–ஆம் ஆண்டில் இக்குழுவால் விருதுநகர் மற்றும் சிவகாசி பகுதிகளில் உள்ள பட்டாசுத் தொழிற்சாலைகளில் 753 ஆய்வுகள் செய்யப்பட்டு விதிமீறல்கள் காணப்பட்ட தொழிற்சாலை நிர்வாகத்தினர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**குழந்தைத் தொழிலாளர்**

தொழிற்சாலைகள் சட்டம், 1948–ன் பிரிவு 67–ன்படி தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர் பணிமுறையை நீக்குதல் தொடர்பாக தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் மிகவும் சிறப்பான முறையில் நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும், அபாயகரமான தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர்கள் பணியமர்த்தப்படுவதை தவிர்க்கும் வகையில் ஒவ்வொரு மாதமும் வருவாய் துறை, காவல் துறை மற்றும் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட உறுப்பினர்களுடன் இணைந்து குழு ஆய்வுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வகையில் 2014–2015–ஆம் ஆண்டில் 1,395 குழு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. ஆய்வுகளின் போது காணப்பட்ட முரண்பாடுகள் தொடர்பாக தொழிற்சாலைகள் நிர்வாகத்தினர் மீது 18 வழக்குகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு ரூ.3,21,500/– அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

**புகார் விசாரணை**

தொழிலாளர்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோரிடமிருந்து பெறப்படும் புகார்களுக்கு தலையாய முன்னுரிமை அளிக்கப்பட்டு, குறைபாடுகளுக்கு தீர்வு காண உடனடியாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு குறைபாடுகள் தீர்க்கப்பட்டு வருகின்றன. **2014–2015–**ஆம் ஆண்டில் **545** புகார்கள் பெறப்பட்டு **538** புகார்கள் விசாரிக்கப்பட்டு முடிக்கப்பட்டு விட்டன. மீதமுள்ள புகார்கள் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

**அபாயகரமான செயல்முறைகள் உள்ள தொழிற்சாலைகள்**

தலைமையகத்தில் உருவாக்கப்பட்டுள்ள பெரும் விபத்து மற்றும் பேரபாய தடுப்புக் குழு, அபாயம் விளைவிக்கக் கூடிய செயல்முறைகளில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகளுக்கு பேரபாயத்தை தடுக்கக் கூடிய பாதுகாப்பு செயல்முறைகளை பரிந்துரைத்து, அதன்படி செயல்படுவதையும் கண்காணிக்கின்றது. தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் **29** செயல்முறை தொழில்கள் அபாயகரமான செயல்முறைத் தொழில்களாக

அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன. 31.03.2015 அன்றைய நிலையில் நமது மாநிலத்தில் இதுபோன்று 133 தொழிற்சாலைகள் பெரும் விபத்து மற்றும் பேரபாய தொழிற்சாலைகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

பெரும் விபத்து மற்றும் பேரபாய தொழிற்சாலைகளிலிருந்து 31.03.2015 வரை 128 உள்ளிருப்பு அவசரகால ஆயத்த நிலை திட்டங்கள் பெறப்பட்டு அவைகளில் 110 திட்டங்கள் நிபந்தனைகளுக்குட்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளன. தொழிற்சாலைகளில், அபாயநிலை அவசர காலகட்டத்தில் தேவைப்படும் ஏற்பாடுகள் போதுமானதாக உள்ளதா என்பதை உறுதி செய்வதற்கும், ஆயத்த நிலைத் திட்டங்களை மேம்படுத்துவதற்கும், மாதிரி ஒத்திகைகள் காலமுறையில் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலர்கள் மேற்பார்வையில் நடத்தப்படுகின்றன. 2014–2015–ஆம் ஆண்டில் 132 மாதிரி ஒத்திகைகள் நடத்தப்பட்டுள்ளன.

**மனை மதிப்பீட்டு குழு**

"பெரும் விபத்து மற்றும் பேரபாயம்" விளைவிக்கக் கூடிய செயல்முறைகளில் ஈடுபடவுள்ள மற்றும் விரிவாக்கம் செய்யப்படவுள்ள தொழிற்சாலைகளின் விண்ணப்பங்களை ஆராய்ந்து, அத்தொழிற்சாலை நிறுவுவதற்கான மனைப் பொருத்தம் குறித்த ஒப்புதல் அளித்திட, அரசுக்கு ஆலோசனை வழங்கிட தொழிற்சாலைகள் சட்டம் **1948**, பிரிவு **41**–அ–வில் குறிப்பிட்டுள்ளபடி "மனைமதிப்பீட்டுக் குழு" ஒன்று அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது. இக்குழுவானது பேரபாய செயல்முறை கொண்ட தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகளுக்கு அறிவுரைகள் வழங்கி துவக்க நிலையிலிருந்தே அத்தொழிற்சாலைகள் பாதுகாப்பான சூழ்நிலை மற்றும் பாதுகாப்பான பணி சூழலுடன் இயங்குவதற்கு வழிவகுக்கிறது. **2014–2015**–ஆம் ஆண்டில் **36** விண்ணப்பங்கள் மனை மதிப்பீட்டு குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டுள்ளன.

**கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணிநிலைமைகள்) சட்டம் 1996 மற்றும் தமிழ்நாடு விதிகள் 2006**

தமிழ்நாடு கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணிநிலைமைகள்) விதிகள் **2006**–ஆம் ஆண்டு வகுக்கப்பட்டு, **2010**– ஆம் ஆண்டு இவ்வியக்கக அலுவலர்களால் அமலாக்கம் செய்யப்பட்டு வருகிறது.

கட்டுமானத் தொழிலில் உள்ள விபத்து அபாயத்தினை தடுத்து தொழிலாளர்களுக்கு உரிய பாதுகாப்பு மற்றும் நல வசதிகளை உறுதி செய்திடும் வகையில் இத் தொழில் தொடர்பான சட்டம் மற்றும் விதிகளை சீரிய முறையில் அமலாக்கம் செய்திட தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலர்கள் அமலாக்க அலுவலர்களாக அறிவிக்கை செய்யப்பட்டதை தொடர்ந்து இவ்வியக்கக அலுவலர்கள் இச்சட்ட விதிகளை தீவிரமாக அமலாக்கம் செய்து வருகின்றனர்.

கட்டுமான தொழிலில் உள்ள விபத்து அபாயத்தினை தடுக்கும் வகையில் தொழிலாளர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் கட்டிட நிறுவனர்கள் ஆகியோர் கடைப்பிடிக்க வேண்டிய பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து எடுத்துரைத்து பாதுகாப்பு விழிப்புணர்வினை ஏற்படுத்திடவும் தொழிலாளர்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை சிறப்பாக கண்காணிக்கும் பொருட்டும் பிரத்யேகமாக இவ்வியக்ககத்தில் கூடுதல் சட்ட அமலாக்க பிரிவு 2013–ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டு, சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது.

2014–2015–ஆம் ஆண்டில் 1,719 கட்டுமான நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், 957 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு ரூ.12,53,750/– அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது.

**பாதுகாப்பு விழிப்புணர்வு மேம்பாடு**

கட்டுமான தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் கட்டிட

நிறுவனர்கள் ஆகியோர் கடைப்பிடிக்க வேண்டிய பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து எடுத்துரைத்து பாதுகாப்பு விழிப்புணர்வினை ஏற்படுத்திடும் வகையில் மாதம்தோறும் இரண்டு பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம்கள் நடத்திட அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம்களை நடத்திட கட்டுமான தொழிலாளர் நல வாரியத்தால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, **68** பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு **6,280** தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

**18.11.2014** அன்று மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் தலைமையில் கட்டட நிறுவன வேலையளிப்பவர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் ஆகியோருக்கு கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் சட்டம் மற்றும் விதிகள் அமலாக்கம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த கூட்டம் நடத்தப்பட்டது. அக்கூட்டத்தில் வெளி மாநில தொழிலாளர்கள் உட்பட அனைத்து கட்டிட தொழிலாளர்களுக்கு மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பான

பணிச்சூழலை உருவாக்கிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் விதி **110–ன்** கீழ் அறிவிக்கப்பட்ட நலத்திட்டங்களான மருத்துவ வசதி, கட்டிட தொழிலாளர்களது குழந்தைகளுக்கான அங்கன்வாடி அமைத்தல் மற்றும் தொழிலாளர்கள் தங்குவதற்கான இடவசதி செய்து தருவது குறித்து விளக்கப்பட்டது. அனைத்து கட்டுமானத் தொழிலாளர்களையும் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் உறுப்பினர்களாக பதிவு செய்ய அனைத்து கட்டிட நிறுவனர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களிடம் மேற்படி கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம், கட்டிடப் பணிகள் அதிக எண்ணிக்கையில் நடைபெறும் இடங்களை கண்டறிய தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்துடன் இணைந்து செயல்பட்டு வருகிறது.

## தொழிற்சாலைகள் மற்றும் கட்டுமான பணியிடங்களில் பணிபுரியும் தொழிலாளர்களது உடல்நலம், பாதுகாப்பு, பயிற்சி மற்றும் மேம்பாட்டுச் செயல்பாடுகள்

### உடல்நல மேம்பாட்டு செயல்பாடுகள்

இவ்வியக்ககத்தில் ஒரு தலைமை மருத்துவ அலுவலர் மற்றும் 8 மருத்துவ அலுவலர்களுடன் மருத்துவ பிரிவு ஒன்று இயங்கி வருகிறது. இவ்வலுவலர்கள் ஊறுவிளைவிக்கும் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் உணவகங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு காலமுறைப்படி, மருத்துவ பரிசோதனை மேற்கொண்டு, உடல்நல மேம்பாடு குறித்து தக்க தடுப்பு நடவடிக்கைகளையும், மருத்துவ அறிவுரைகளையும் தெரிவித்து வருகின்றனர். அத்துடன் தொழிற்சாலைகளில் பணிபுரியும் வளரிளம் பருவத்தினர்களுக்கு மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு தகுதிச் சான்றுகளும் வழங்கப்படுகின்றன. குழந்தைத் தொழிலாளர்களின் வயதினை உறுதி செய்திடும் பொருட்டு குழந்தைத் தொழிலாளர் குழு ஆய்வுகளின்போதும் உடன் செல்கின்றனர். 2014–2015–ஆம் ஆண்டில் மருத்துவ

அலுவலர்கள் அபாயகரமான செயல்முறைகளில் ஈடுபடும் தொழிற்சாலைகளில் பணிபுரியும் **29,443** தொழிலாளர்களுக்கு மருத்துவச் சான்றிதழ்களும், தொழிற்சாலைகளில் உள்ள உணவகங்களில் பணிபுரியும் **4,837** தொழிலாளர்களுக்கு மருத்துவச் சான்றிதழ்களும், **29,197** வளரிளம் பருவத்தினருக்கு தகுதிச் சான்றிதழ்களும் வழங்கியுள்ளனர். இம்மருத்துவப் பிரிவின் கீழ் செயல்பட்டு வரும் தொழில் நலவியலகம், ஊறுவிளைவிக்கும் மற்றும் அபாயகரமான தொழில்முறை தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களது உடல் தகுதி பராமரிப்பில் முக்கிய கவனம் செலுத்தி வருகிறது.

**இரைச்சலின் அளவினை கண்காணித்தல்**

இவ்வியக்ககம், தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு அதிகப்படியான இரைச்சலால் ஏற்படும் பாதிப்புகளை தவிர்க்க சீரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதிகப்படியான இரைச்சலை ஒலி அளப்பான் கருவிகள் மூலம் அளவிட்டு, தொழிலாளர்களை அதன் பாதிப்பிலிருந்து பாதுகாத்திட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

**பாதுகாப்பு விழிப்புணர்வு மேம்பாடு**

பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள், பாதுகாப்பு ஒத்திகைகள் மற்றும் பாதுகாப்பு பிரச்சாரம் போன்ற பாதுகாப்பு மேம்பாட்டு பணிகளினால், இவ்வியக்கக அலுவலர்கள் தொழிலாளர்களின் பாதுகாப்பினை உறுதிபடுத்தி, தீவிர மற்றும் அயராத முனைப்புடன் செயல்பட்டு வருவதால் விபத்து நிகழ்வுகள் கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது.

இதற்காக, மூன்று பாதுகாப்பு பிரச்சாரக்குழுக்கள் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மண்டலங்களில் இவ்வியக்ககத்தால் ஏற்படுத்தப்–பட்டுள்ளது. இக்குழு காலமுறைதோறும் இரசாயனம், பட்டாசு, தோல்பதனிடும் தொழிற்சாலை, வெளுத்தல் மற்றும் சாயப்பட்டறை தொழிற்சாலைகளுக்கு சென்று தொழிலில் உள்ள அபாயங்கள் குறித்தும் பாதுகாப்பு வழிமுறைகளை பின்பற்றுவது குறித்தும் நிர்வாகத்தினர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கியும், விபத்தினை தடுக்கும் வகையில் தொழிலாளர்களால் கடைப்பிடிக்கப்பட வேண்டிய பாதுகாப்பு

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் எடுத்துரைக்கின்றன. இக்குழுக்கள் 139 பாதுகாப்பு பிரச்சாரங்களை 7,177 நபர்கள் பயனடையும் வகையில் 2014–2015–ஆம் ஆண்டில் நடத்தியுள்ளது.

இவ்வியக்கக அலுவலர்களால் காலமுறைப்படி தொழிற்சாலை வளாகத்திலேயே, கட்டணம் ஏதுமின்றி தமிழில் பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. 2014–2015–ஆம் ஆண்டில் 24,416 தொழிலாளர்கள் பயனடையும் வகையில் 508 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன.

தொழிலக பாதுகாப்பு மேம்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தேசிய பாதுகாப்புக் குழுமம் போன்ற அரசு சாரா தன்னார்வ நிறுவனங்களுடன், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் இணைந்து தொழிற்சாலை நிர்வாகனத்தினரும், தொழிலாளர்களும், ஒப்பந்தத் தொழிலாளர்களும் பாதுகாப்பு விழிப்புணர்வு பெறும் வண்ணம் கருத்தரங்குகள் நடத்தி வருகின்றது. 2014–2015–ஆம் ஆண்டில் 1,210 தொழிலாளர்கள் பயனடையும் வகையில் 8 கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன.

**அழுத்தக் கலன் பாதுகாப்பு**

தொழிற்சாலைகள் சட்டம், **1948** மற்றும் இதர சட்டங்களை அமல்படுத்துவதோடு, தொழிற்சாலைகளில் நிறுவப்பட்டுள்ள அழுத்தக்கலன்கள் பாதுகாப்புடன் செயல்படும் வழிமுறைகள் இவ்வியக்கக அலுவலர்களால் உறுதி செய்யப்படுகிறது. இந்திய கொதிகலன்கள் சட்டத்தின் கீழ்வரும் நீராவி கொதிகலன்களைத் தவிர்த்து வாயு மண்டல காற்று அழுத்தத்திற்கு மேல் (above atmospheric pressure) செயல்படும் அனைத்து அழுத்தக் கலன்களும் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை வெளிப்புறச் சோதனையும், ஆண்டுக்கு ஒரு முறை உட்புறச் சோதனையும் அல்லது இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை நீரழுத்தச் சோதனையும் அல்லது நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நுண்ணொலிச் சோதனையும் அமலாக்க அதிகாரிகளால் செய்யப்படுகின்றன. **2014–2015**–ஆம் ஆண்டில் **1,09,210** வெளிப்புற, **2,112** உட்புற, **16,015** நீர் அழுத்த மற்றும் **6,006** நுண்ணொலி சோதனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**சிவகாசியில் பாதுகாப்பு பயிற்சி மையம்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கான பாதுகாப்பு விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கு பயிற்சி மையம் சிவகாசியில் துவங்கப்பட்டு, இதுவரையுள்ள காலத்தில் **18** குழுக்களில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு **589** ஃபோர்மேன்கள் பயனடைந்துள்ளனர். இவ்வியக்கத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக இம்மாநிலத்தில் விபத்துக்களின் விகிதாச்சாரம் கணிசமாக குறைந்துள்ளது.

**தொகுப்பு தனிநபர் விபத்து காப்பீட்டுத் திட்டம்**

உச்சநீதிமன்றத்தின் **31.10.1990** நாளிட்ட ஆணையின்படி புதிய தொகுப்பு தனிநபர் விபத்து காப்பீட்டுத் திட்டம், தமிழ்நாட்டில் உள்ள தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் அனைத்து தொழிலாளர்களுக்கும் ரூ.**50,000/–** நிவாரணம் பெற்று வழங்கும் வகையில் ஆணை வழங்கப்பட்டது. இத்திட்டம் **01.07.1991** அன்று முதல் அமலுக்கு வந்தது. ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டத்திற்கான பிரிமியத் தொகை பல்வேறு

காப்பீட்டு நிறுவனங்கள், பட்டாசு மற்றும் தீப்பெட்டி உற்பத்தியாளர் சங்க நிர்வாகிகள் ஆகியோருடன் கலந்து ஆலோசித்து நிர்ணயம் செய்யப்படுகிறது. ஒவ்வொரு தொழிற்சாலையிலும் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் கவரப்பட வேண்டிய தொழிலாளர்களின் எண்ணிக்கையானது, நடப்பு ஆண்டில் யாதொரு நாளில் பணிபுரிந்துள்ள அதிகபட்ச தொழிலாளர்களின் எண்ணிக்கையுடன் கூடுதலாக 10% தொழிலாளர்கள் இருக்கும் வகையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு தொழிலாளிக்கும் பிரிமியம் செலுத்த வேண்டியது நிர்வாகத்தின் பொறுப்பாகும் என்பது சட்டமாக்கப்பட்டுள்ளது. தற்போது, தி ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனி, சிவகாசி என்ற காப்பீட்டு நிறுவனத்தின் மூலம் காப்பீடு புதுப்பிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த நிவாரணமானது, தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டம் அல்லது பணியாளர் இழப்பீட்டு சட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிவாரணங்கள் அல்லாது கூடுதலாக வழங்கப்படுவதாகும்.

**மாநில பாதுகாப்பு விருதுகள்**

தொழிற்சாலைகளில் சிறந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிர்வாகத்தினரை ஊக்குவிக்கும் பொருட்டு விபத்து நிகழ்வுகளைக் குறைக்கும் நிர்வாகத்தினருக்கு ஒவ்வொரு ஆண்டும் மாநில பாதுகாப்பு விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் 90 முதல் பரிசுகளும், 90 இரண்டாம் பரிசுகளும், 90 மூன்றாம் பரிசுகளும் நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது.

மேலும், தொழிற்சாலைகளில் பாதுகாப்பு விழிப்புணர்வினை மேம்படுத்தவும் அதிக எண்ணிக்கையில் தொழிற்சாலைகள் நிர்வாகத்தினர் பங்கேற்பதை ஊக்குவிக்கவும், மாநில பாதுகாப்பு விருதுகளுக்கான முதல் பரிசு பெறும் 90 தொழிற்சாலைகள் நிர்வாகத்தினருக்கு வழங்கப்படும் ஒவ்வொரு வெள்ளி கேடயத்தின் மதிப்பினை 2011–ஆம் ஆண்டிலிருந்து ரூ.2500/–லிருந்து ரூ.5000/–ஆக உயர்த்தியும், இரண்டாம் பரிசு பெறும் 90 தொழிற்சாலைகள் நிர்வாகத்தினருக்கு வழங்கப்படும்

ஒவ்வொரு வெள்ளி கேடயத்தின் மதிப்பினை ரூ.1500/– லிருந்து ரூ.4000/–ஆகவும் 2011–ஆம் ஆண்டு முதல் உயர்த்தியும் ஆணையிடப்பட்டுள்ளது. 2010–ஆம் ஆண்டு முதல் 2012–ஆம் ஆண்டு வரை ஆண்டிற்கு 197 தொழிற்சாலை நிர்வாகத்தினர் விருது பெற தேர்ந்தெடுக்கப்பட்டு, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களால் விருதுகள் வழங்கப்பட்டன.

பட்டாசுத் தொழிற்சாலைகளில் நிகழும் விபத்தினை தடுப்பதற்கும், குறைப்பதற்கும் பாதுகாப்பு விருதுகள் வழங்கும் திட்டம் ஏற்படுத்தப்பட்டு, விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் மூன்று முதல் பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ.15,000/– மதிப்பிலும், மூன்று இரண்டாம் பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ.12,000/– மதிப்பிலும், மூன்றாம் பரிசுகள் மூன்று, ஒவ்வொன்றும் ரூ.10,000/– மதிப்பிலும் வெள்ளிக் கேடயங்களாக வழங்கப்படுகின்றன.

**உயர்ந்த உழைப்பாளர் விருதுகள்**

விபத்து தடுப்பு நடவடிக்கை மற்றும் உற்பத்தி திறன் அதிகரிப்பில் சிறந்த ஆலோசனைகளை வழங்கும் தொழிலாளர்களை ஊக்குவிக்கும் வண்ணம் தொழிற்சாலைகளில் உற்பத்தித் திறனை உயர்த்துதல், பணிச்சூழ்நிலைகளை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாப்பு தரத்தை உயர்த்துதல் ஆகியவை குறித்து பயன்மிக்க கருத்துக்கள் தரும் தொழிலாளர்களுக்கு ஆண்டுதோறும் ''தமிழக அரசின் உயர்ந்த உழைப்பாளர் விருது'' வழங்கப்பட்டு வருகின்றன.

தொழிலாளர்கள் அதிக எண்ணிக்கையில் பங்கேற்கவும், அவர்களை ஊக்குவிக்கும் வகையில் தமிழக அரசின் உயர்ந்த உழைப்பாளர் விருதுகளின் எண்ணிக்கை 2012–ஆம் ஆண்டு முதல் 24–லிருந்து 43–ஆக உயர்த்தி அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாணை வெளியிடப்பட்ட பின்னர் 2012–ஆம் ஆண்டிற்கான விருதுகளுக்கான விண்ணப்பங்களின் எண்ணிக்கை 100 சதவிகிதம் அதிகரித்துள்ளது. 2010–ஆம் ஆண்டு முதல் 2012–ஆம் ஆண்டு வரை

ஆண்டிற்கு **91** தொழிற்சாலைகளிலிருந்து **169** தொழிலாளர்கள் உயர்ந்த உழைப்பாளர் விருதுகள் பெற தேர்ந்தெடுக்கப்பட்டு, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களால் விருதுகள் வழங்கப்பட்டன.

**இவ்வியக்கத்திற்கென பிரத்யேக வலைதளம் உருவாக்குதல்**

**2014–2015–**ஆம் ஆண்டு சட்டமன்ற கூட்டத் தொடரில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் விதி **110–**ன் கீழ் அறிவிக்கப்பட்டவாறு, இவ்வியக்கத்திற்கென பிரத்யேக வலைதளம் உருவாக்கிட அரசாணை (நிலை) எண்.**167**, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஜி1) துறை, நாள் **19.12.2014–**ல், ஆணை வெளியிடப்பட்டது. தொழிற்சாலைகளது உரிமங்களை புதுப்பிக்கவும், புதியதாக பதிவு பெற்ற தொழிற்சாலைகளுக்கு, புது உரிமங்களையும் இந்த வலைதளம் மூலம் வழங்க இயலும். இந்த வலைதளம் உருவாக்கப்படுவதன் மூலம் இவ்வியக்ககத்தின் செயல்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்த இயலும். பல்வேறு

பணிகளுக்கான பாதுகாப்பு உற்பத்தி செயல்முறைகள், அவை தொடர்பான பாதுகாப்பு குறியீடுகள், பாதுகாப்பில் அவ்வப்போது ஏற்படும் முன்னேற்றங்கள் தொடர்பாக தொழிலாளர்கள், தொழிற்சாலை நிர்வாகத்தினர் மற்றும் பொது மக்கள் இவ்வலைதளம் மூலம் அறிய இயலும்.

*******

## III. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

### வேலைவாய்ப்புப் பிரிவு

வேலைவாய்ப்பு அலுவலகங்களின் முதன்மைப் பணி வேலைநாடுநர்களைப் பதிவு செய்தல், பதிவு செய்தவர்களை வேலை அளிப்பவருக்கு பரிந்துரைத்தல், தொழில் நெறி வழிகாட்டுதல் ஆகியவை ஆகும். இவை மட்டுமின்றி வேலைநிலவரத்தகவல் சேகரித்தல், தொகுத்தல், தனியார்துறையில் பணியமர்த்தல் ஆகியவற்றுடன் பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கு இளைஞர்களை ஆயத்தப்படுத்தும் பணியையும் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மேற்கொள்கின்றன. இன்றைய கால கட்டத்திற்கேற்ப, வேலைவாய்ப்பு அலுவலகப் பணிகள் முழுமையாக கணினிமயமாக்கப்பட்டுள்ளன. வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்தல், புதுப்பித்தல், பதிவு அடையாள அட்டை வழங்குதல், வேலையளிப்பவர்களால் அறிவிக்கப்படும் காலியிடங்களுக்கு பதிவு செய்தவர்களைப் பரிந்துரைத்தல் ஆகிய முக்கியப்

பணிகள் அனைத்தும் ஆன்லைன் வாயிலாக மேற்கொள்ளப்படுகின்றன.

**நிர்வாக அமைப்பு**

அரசின் கொள்கை முடிவின்படி, தமிழகத்தின் 32 மாவட்டங்களிலும் ஒரு வேலைவாய்ப்பு அலுவலகம் வீதம் இயங்கி வருகிறது. இவ்வலுவலகங்கள் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள்முதல், பட்டப்படிப்பு பயின்றவர்கள்வரை பதிவுசெய்து வருகின்றன. சென்னையில் மட்டும், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்துடன், தொழில் திறனற்றோர் மற்றும் தொழில் நுட்பத் திறனுடையோர் ஆகியோருக்கு சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. மாநிலத்தில் இரண்டு தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் சென்னையில் ஒன்றும் மதுரையில் ஒன்றுமாக இயங்கி வருகின்றன. மாற்றுத் திறனாளிகளுக்கான ஒரு சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகமும் சென்னையில் செயல்பட்டு வருகின்றது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான 5 பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் மையங்கள்

திருச்சிராப்பள்ளி, கடலூர், கோயம்புத்தூர், வேலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் செயல்படுகின்றன. மேலும், பழங்குடியினருக்கான சிறப்புத் தொழில் நெறி வழிகாட்டும் மையம் உதகமண்டலத்தில் செயல்படுகின்றது. ஆகமொத்தம் தமிழ்நாட்டில் 37 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள், ஐந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் மையங்கள் மற்றும் ஒரு பழங்குடியினருக்கான சிறப்புத் தொழில்நெறி வழிகாட்டும் மையம் செயல்பட்டு வருகின்றன.

இவ்வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மற்றும் சிறப்பு அலுவலகங்களின் செயலாக்கங்களை கண்காணிக்கும் பொருட்டு சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் நான்கு மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. இவ்வலுலகங்கள் அனைத்தும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் அவர்களின் தலைமையின் கீழ் செயல்படுகின்றன. இயக்ககத்தில் இரண்டு இணை இயக்குநர்கள், நான்கு

துணை இயக்குநர்கள் மற்றும் இதர அலுவலர்கள் துறையின் ஒட்டுமொத்த நிர்வாகத்தில் இயக்குநருக்கு துணை புரிந்து வருகின்றனர்.

**மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்புப் பிரிவுகள்**

தமிழகத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம் ஒன்று சென்னை, கிண்டியில் செயல்பட்டு வருகின்றது. அதுமட்டுமின்றி மாநிலம் முழுவதும் **13** சிறப்பு பிரிவுகள் கோயம்புத்தூர், ஈரோடு, கடலூர், மதுரை, நாகர்கோவில், காஞ்சிபுரம், திருச்சிராப்பள்ளி, சேலம், தூத்துக்குடி, தஞ்சாவூர், உதகமண்டலம், திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் செயல்படுகின்றன. இவை மாற்றுத் திறனாளிகளுக்கு உகந்த பணிகளைக் கண்டறிந்து பணியமர்த்தம் செய்யும் பணியினை மேற்கொண்டு வருகின்றன. **31.03.2015** அன்றைய நிலவரப்படி **1,11,588** மாற்றுத் திறனாளிகள் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ளனர். இவர்களில் **86,250** உறுப்பு நலம்

குன்றியவர்கள், **13,211** விழிப்புலன் இழந்தவர் மற்றும் **12,127** செவித்திறன் குறைந்தோர் ஆகியோர் அடங்குவர்.

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் மையங்கள்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்காக **5** பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் மையங்கள் கோயம்புத்தூர், கடலூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் வேலூரில் இயங்கி வருகின்றன.

இம்மையங்கள் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கான வழிகாட்டுதல் பணிகள், வேலைத் தகவல்கள் அளித்தல், தொழில் நெறி வழிகாட்டும் கண்காட்சி நடத்துதல், தன்னம்பிக்கை வளர்க்கும் நிகழ்ச்சி நடத்துதல், ஆலோசனை வழங்குதல் மற்றும் பல்வேறு தேர்வு முகமைகளால் நடத்தப்பெறும் போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகளை நடத்துதல் ஆகிய பணிகளை அவ்வலுவலகங்கள் அமைந்துள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுடன் ஒருங்கிணைந்து

நடத்தி வருகின்றன. நெடுந்தொலைவில் பதிவு முகாம் மற்றும் ஊக்குவிப்பு நிகழ்ச்சி நடத்தப்படுகின்றது.

இதன் மூலம், 2014–2015–ஆம் ஆண்டில் 3,686 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின பதிவுதாரர்கள் பயனடைந்தனர். மேலும், இம்மையங்கள் 137 தன்னம்பிக்கை வளர்க்கும் நிகழ்ச்சிகளையும், 221 வேலைவாய்ப்பு சொற்பொழிவுகளையும் ஏற்பாடு செய்ததுடன் 144 சுயவேலைவாய்ப்பிற்கான விண்ணப்பங்களையும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு பரிந்துரைத்துள்ளது.

**பழங்குடியினருக்கான சிறப்பு தொழில் நெறி வழிகாட்டும் மையம்**

உதகமண்டலத்தில், பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டி மையம் இயங்கி வருகின்றது. இம்மையம் பழங்குடியின மாணவர்கள் மற்றும் வேலை நாடுநர்களுக்கு வழிகாட்டும் விதமாக தகவல் கையேடுகள் வெளியிடுவதுடன் தொழில்கள் மற்றும் பயிற்சிகள் பற்றிய தகவல்களை சேகரித்து, தொகுத்து பழங்குடியின மக்களுக்கு வழங்கி வருகிறது.

தொழில்நெறி வழிகாட்டும் அலுவலர், பழங்குடியினருக்கான பள்ளிகள் மற்றும் தங்கும் விடுதிகளில் உள்ள பழங்குடியின மாணவர்களுக்கு தொழில்நெறி சொற்பொழிவு வழங்குகின்றனர். சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையம், உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு குறித்த வழிகாட்டுதல், பயிற்சி வகுப்புகள், கல்வி உதவித்தொகை மற்றும் வேலைவாய்ப்பு குறித்த விவரங்களையும் அளிக்கின்றது. இம்மையம் நெடுந்தொலைவில் வசிக்கும் பழங்குடியினரின் இடத்திற்கே சென்று அவ்விடத்திலேயே பதிவுகளை மேற்கொள்கிறது.

2014–2015–ஆம் ஆண்டில் 47 பழங்குடியின மனுதாரர்கள் பதிவு செய்யப்பட்டனர். 142 பழங்குடியின மனுதாரர்கள் வழிகாட்டப்பட்டனர். 132 மனுதாரர்களுக்கு தனிநபர் தகவல்கள் வழங்கப்பட்டன. 57 தொழில்நெறி சொற்பொழிவுகள் தொழில்நெறி வழிகாட்டும் அலுவலரால் வழங்கப்பட்டன.

**வேலைவாய்ப்பு அலுவலகங்களின் செயல்பாடுகள்**

31.03.2015 நிலவரப்படி, அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களின் உயிர்ப் பதிவேட்டில் காத்திருப்போரின் எண்ணிக்கை 84,97,402 ஆகும். 2014–2015–ஆம் ஆண்டில் 16,10,760 மனுதாரர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ளனர்.

**அ) பள்ளிகளின் மூலமாக வேலைவாய்ப்பிற்கு பதிவு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி 2011–2012–ஆம் கல்வியாண்டு முதல் 12–ஆம் வகுப்பு மற்றும் 10–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்கள் தாங்கள் படித்த பள்ளிகளின் மூலமாகவே தங்களின் கல்வித் தகுதிகளை ஆன்லைன் வசதியினை பயன்படுத்தி www.tnvelaivaaippu.gov.in என்ற வேலைவாய்ப்பு இணையதளத்தில் பதிவு செய்துக் கொள்ளும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது. இவ்வாய்ப்பினை பயன்படுத்தி, 2014–2015–ஆம் கல்வியாண்டில் 12–ஆம் வகுப்பு தேறிய 5,57,906 மாணவ மாணவியரும், 10–ஆம்

வகுப்பு தேறிய 7,35,071 மாணவ மாணவியரும் பயன் பெற்றனர்.

**தொழில் நெறி வழிகாட்டும் பணிகள்**

தமிழ்நாட்டிலுள்ள 17 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் தொழில்நெறி வழிகாட்டும் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. இதன்வாயிலாக இளைஞர்களுக்கு உயர்கல்வி, வேலைவாய்ப்பு, சுயதொழில் ஆகியவை குறித்த தகவல்கள் வழங்கப்படுகின்றன. அதுமட்டுமின்றி, தனிநபர் தகவல் அளித்தல், குழு கூட்டங்கள் நடத்துதல் மற்றும் தொழில் பழகுநர் பயிற்சி தகவல்கள் அளிக்கப்படுகின்றன.

மேலும், இம்மையங்கள் போட்டித் தேர்வுகளுக்கு பயிற்சி வகுப்புகள் நடத்துதல், தொழில்நெறி சொற்பொழிவாற்றுதல், வேலையளிப்பவர்களிடம் தொடர்பு கொள்ளுதல், தொழில்நெறி கண்காட்சி மற்றும் கருத்தரங்குகளை கல்வி நிறுவனங்களில் நடத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்கின்றன. தமிழ்நாடு அரசு, ஒவ்வொரு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கும், தொழில்நெறி வழிகாட்டும் கண்காட்சியினை கல்வி

நிறுவனங்களில் நடத்துவதற்கு ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. தொழில்நெறி வழிகாட்டுதல் பணிகள் இளைஞர்களுக்கு உயர்கல்வி, வேலைவாய்ப்பு, போட்டித் தேர்வுகள் ஆகியவை குறித்து முடிவெடுக்க பேருதவியாக அமைகின்றன.

2014–2015–ஆம் ஆண்டில் 22,650 மனுதாரர்கள் தொழில் பழகுநர் பயிற்சிக்கு பரிந்துரைக்கப்பட்டனர். 924 தொழில் நெறி சொற்பொழிவுகளும், 32 தொழில்நெறி கண்காட்சிகளும் நடத்தப்பட்டன. 832 பதிவுதாரர்களுக்கு சுயதொழில் குறித்த தகவல்கள் வழங்கப்பட்டன.

**தன்னார்வப் பயிலும் வட்டங்கள்**

போட்டித் தேர்வுகளுக்கு இளைஞர்களைத் தயார்படுத்த, 32 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் தன்னார்வ பயிலும் வட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 2003–ஆம் ஆண்டில் இத்திட்டம் 385 ஊராட்சி ஒன்றியங்களுக்கும்

விரிவுபடுத்தப்பட்டன. இதன் மூலம் கிராமப்புற இளைஞர்கள் வேலைவாய்ப்பினை பெறும் வகையில், அவர்களின் போட்டியிடும் திறன் மேம்படுத்தப்படுகிறது. தன்னார்வப் பயிலும் வட்டங்கள் மூலம், மாநிலத்தில் பல்வேறு தேர்வு முகமைகளால் விளம்பரப்படுத்தப்படும் போட்டித் தேர்வுகளுக்கு கட்டணமில்லா வகுப்புகள் நடத்தப்படுகின்றன. மேலும், போட்டித் தேர்வுகளுக்கான பாடப்புத்தகங்கள், மாத / வார நாளிதழ்கள், செய்தித்தாள்கள் மற்றும் இதர பாடக் குறிப்புகள் ஆகியவை இளைஞர்களின் பயன்பாட்டிற்காக அளிக்கப்படுகின்றன.

**தனியார் துறையில் பணியமர்த்தம்**

தமிழகத்தில் தொழில் துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிக்கேற்ப, தனியார் துறையில் வேலைவாய்ப்புகள் பெருமளவு அதிகரித்துள்ளன. எனவே, வேலைவாய்ப்பு அலுவலகங்கள் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு தனியார் துறையில் வேலைவாய்ப்பினை பெற்றிடும் பொருட்டு வேலைவாய்ப்பு முகாம்களை நடத்தி வருகின்றன. மாநிலத்தின் 37 மாவட்ட வேலைவாய்ப்பு

அலுவலகங்களிலும், தனியார் துறையின் மனிதவள தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள ஏதுவாகவும், வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் தனியார்துறையில் வேலைவாய்ப்பு பெற்றிடவும், மாவட்ட அளவிலான தனியார்த்துறை பணியமர்த்தல் உதவிப் பிரிவு **2012–**ஆம் ஆண்டு முதல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம், ஒவ்வொரு மாவட்டத்திலும் நடத்தப்பட்டு வருகின்றது. **2014–2015–**ஆம் ஆண்டு தனியார் துறை பணியமர்த்தல் பிரிவு மூலம் **17653** பணிநாடுநர்கள் தனியார் துறையில் பணி நியமனம் பெற்றுள்ளனர். மேலும், தனியார்துறை பணியமர்த்தல் பிரிவு, நேருக்குநேர் நிகழ்ச்சிகளை நடத்துதல், வேலைவாய்ப்புத் தகவல்களை வேலைநாடுநர்களுக்கு வழங்குதல் போன்ற பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

பெரிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம்கள் சங்கராபுரம், கோவில்பட்டி, மதுரை, ஜோலார்பேட்டை, தூத்துக்குடி, சின்னசேலம் மற்றும் ஒரத்தநாடு ஆகிய இடங்களில் நடத்தப்பட்டன. இம்முகாம்களில், **862**

வேலையளிப்போர் மற்றும் **79,758** வேலை நாடுநர்கள் கலந்துகொண்டனர். **15,789** நபர்கள் தேர்வு செய்யப்பட்டு தனியார் துறையில் பணியமர்த்தம் செய்யப்பட்டனர். **2014–2015**–ஆம் ஆண்டில் மட்டும் மொத்தம் **34,197** வேலைநாடுநர்கள் தனியார் துறையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**வேலைவாய்ப்பற்றோருக்கான உதவித் தொகை திட்டம்**

**அ) பொது பிரிவினருக்கானது**

வேலைவாய்ப்பற்றோருக்கான உதவித்தொகை, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக உயிர் பதிவேட்டில் காத்திருக்கும் இளைஞர்களுக்கு, வயதுவரம்பு, ஆண்டு வருமானம் போன்ற தகுதிகளுக்குட்பட்டு, மூன்றாண்டு வரை வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ் மாதம் ஒன்றுக்கு பள்ளியிறுதி வகுப்பு தோல்வியுற்றவர்களுக்கு ரூ.**100**/–ம், பள்ளியிறுதி வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.**150**/–ம், மேல்நிலை வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.**200**/–ம், பட்டப்படிப்பில் தேர்ச்சி

பெற்றவர்களுக்கு ரூ.300/–ம் வழங்கப்படுகின்றது. 2014–2015–ஆம் ஆண்டில் 79,844 பயனாளிகளுக்கு ரூ.20.76 கோடி உதவித்தொகை வழங்கப்பட்டது.

**ஆ) மாற்றுத்திறனாளிகளுக்கானது**

மாற்றுத் திறனாளிகளுக்கான வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து ஒரு ஆண்டுக்கு மேலாக உயிர் பதிவேட்டில் காத்திருக்கும் இளைஞர்களுக்கு, வயதுவரம்பு, ஆண்டு வருமானம் போன்ற தகுதிகளுக்குட்பட்டு, பத்து ஆண்டு வரை வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ் மாதம் ஒன்றுக்கு பள்ளியிறுதி வகுப்பு தோல்வி மற்றும் தேர்ச்சியுற்றவர்களுக்கு ரூ.300/–ம், மேல்நிலை வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.375/–ம், பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.450/–ம் வழங்கப்படுகின்றது. 2014–2015–ஆம் ஆண்டில் 23,314 பயனாளிகளுக்கு ரூ.9.91 கோடி உதவித்தொகை வழங்கப்பட்டது.

**தேசிய வேலைவாய்ப்புப் பணியினை தேசிய தொழில்நெறி பணியாக மாற்றுதல்**

காலப்போக்கில் அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களாக மாற்றப்படும். முதற்கட்டமாக, வேலூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் தொழில்நெறி வழிகாட்டும் மையம் அமைத்திட ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தேசிய தொழில்நெறி பணியின் முக்கிய அங்கமாகத் திகழ்வது, தேசிய தொழில்நெறிப் பணிக்கான இணையதளம் ஆகும். தேசிய அளவில் உள்ள வேலையளிப்போர் மற்றும் வேலைநாடுநர்கள் பயன்பெறும் வகையில், வேலைவாய்ப்பற்ற இளைஞர்களின் பதிவு விவரங்கள் தேசிய தொழில்நெறி இணையதளத்திற்கு மாற்றப்படும்.

**சிறப்புப் புதுப்பித்தல் சலுகை**

கடந்த சட்டமன்ற கூட்டத்தொடரில், மாண்புமிகு ஊரகத் தொழில்கள் மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கிணங்க, அரசாணை (டி) எண்.584, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(ட்டி2)

துறை, நாள் **08.12.2014**–ன்படி, **2011, 2012** மற்றும் **2013** ஆகிய வருடங்களில் பதிவுகளை புதுப்பிக்கத் தவறியவர்கள் தங்களது பதிவுகளை புதுப்பித்துக்கொள்ள சிறப்புப் புதுப்பித்தல் சலுகை வழங்கப்பட்டுள்ளது. இச்சலுகையைப் பயன்படுத்தி **1,10,694** மனுதாரர்கள் தங்கள் பதிவினை புதுப்பித்துள்ளார்கள்.

## பயிற்சிப் பிரிவு

தொழிற் பயிற்சியானது ஒரு தனிமனிதனை ஒரு குறிப்பிட்ட வேலை அல்லது பணிக்கு தயார் செய்கிறது. மக்கள் சுயசார்புடையவர்களாக மாறுவதற்கு இது ஒரு முக்கிய திறவுகோலாகும். மேலும், தொழிற் பயிற்சி பெறுவதால் மக்கள் தம் தகுதிக்கேற்ற வேலையைத் தேடிக் கொள்வதில் உள்ள வாய்ப்புகள் அதிகரிக்கிறது என்பதோடு, தகுதியான வேலை மற்றும் தரமான ஊதியம் பெறுவதிலும் உதவி செய்து வறுமையின் பிடியிலிருந்து வெளிக்கொண்டுவரவும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயரச் செய்யத் தேவையான திறமைகளையும் அளிக்கிறது. ஒருவரின் ஊதியம் பெறும் பணியாக இருப்பினும் மற்றும் சுயதொழிலாக இருப்பினும் இரண்டிலுமே அவரது திறமையை உயர்த்துவதில் திறன்மேம்பாடு முக்கிய பங்கு வகிக்கிறது என்பதோடு மாறிக் கொண்டிருக்கும் தொழில்நுட்பம் மற்றும் தொழிலாளர் சந்தை தேவைகளுக்கு ஏற்ப, ஒருவரை தயார்படுத்திக் கொள்ளும் திறமையையும் இது தருகிறது. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் பயிற்சிப்

பிரிவானது, தொழில் நிறுவனங்களின் தேவைகளை பூர்த்தி செய்யவும், மக்களிடையே சுயதொழில் தொடங்கும் உணர்வைத் தூண்டவும் பல்வேறுபட்ட தொழிற் பிரிவுகளில் திறன்பெற்ற மனித வளத்தை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் துறைத் தலைவராவார். இயக்குநருக்கு உதவியாக மாநில இயக்குநரகத்தில் இரண்டு இணை இயக்குநர்கள் உள்ளனர். நிர்வாக வசதிக்காக சென்னை, திருச்சி, கோயம்பத்தூர், மதுரை, மற்றும் திருநெல்வேலி என ஐந்து மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மண்டலத்திலும் அரசு தொழிற் பயிற்சி நிலையங்களின் செயல்பாடுகளை மண்டலப் பயிற்சி இணை இயக்குநர்கள் மேற்பார்வையிடுகின்றனர். மாணவர் எண்ணிக்கைக்கேற்ப பயிற்சி அலுவலர் / உதவி இயக்குநர் / துணை இயக்குநர் நிலையிலான முதல்வர்கள் தலைமையில் இத்தொழிற் பயிற்சி நிலையங்கள் இயங்குகின்றன.

## கைவினைஞர் பயிற்சித் திட்டம்

### அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள்

கைவினைஞர் பயிற்சித் திட்டத்தின் கீழ் பல்வேறு தொழிற் பிரிவுகளில் பயிற்சி அளிப்பதன் மூலம் தொழில் நுட்ப உதவியாளர் அளவிலான மனிதவளத்தை உருவாக்குவதில் தொழிற் பயிற்சி நிலையங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. மாநிலத்தில் உள்ள அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள் மற்றும் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் மூலம் பல்வேறு பயிற்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தொழிற்சாலைகளுக்கு தேவைப்படும் தொழிற்திறன் பெற்ற மனித வளத்தை தொடர்ந்து கிடைக்கச் செய்வதை உறுதி செய்ய பல்வேறு தொழிற் பிரிவுகளில் முறையான பயிற்சிகள் இத்தொழிற் பயிற்சி நிலையங்களில் வழங்கப்படுகின்றன.

தமிழ்நாட்டில் 77 அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள் செயல்படுகின்றன. மகளிருக்கென 12, ஆதிதிராவிட வகுப்பினருக்கென 1 மற்றும்

பழங்குடியினருக்கென 6 என இயங்கும் தொழிற்பயிற்சி நிலையங்களும் இதில் அடங்கும். **2014–15**ம் ஆண்டில் அனைத்து அரசு தொழிற் பயிற்சி நிலையங்களிலும் 28259 மாணவர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். அனைத்து அரசு பொது தொழிற் பயிற்சி நிலையங்களிலும் ஆண், பெண் ஆகிய இரு பாலருக்கும் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. 14 முதல் 40 வயதிற்குட்பட்ட மாணவர்கள் பயிற்சிக்கு சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். தொழிற் பயிற்சி நிலையங்களில் சேரும் பெண்களுக்கு வயது உச்சவரம்பு இல்லை.

ஒவ்வொரு ஆண்டும் ஜுலை மாதத்தில் மாவட்ட கலந்தாய்வு மூலம் மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது. பயிற்சிக் காலம் தொழிற்பிரிவிற்கேற்ப தேசிய தொழிற் பயிற்சி குழும விதிமுறைகளின்படி ஒரு ஆண்டு முதல் இரண்டு ஆண்டுகள் வரை ஆகும். ஆகஸ்ட் **2013** சேர்க்கை முதல் தொழிற் பயிற்சி நிலையங்களில் பருவமுறை வடிவிலான பயிற்சி வழங்கப்படுகிறது. இரண்டு வருட தொழிற் பிரிவுகள் நான்கு பருவமுறைகளையும், ஒரு வருட தொழிற் பிரிவுகள்

இரண்டு பருவமுறைகளைக் கொண்டதாகும். தொழிற் பயிற்சிகள் பிட்டர், டர்னர், மெஷினிஸ்ட், எலக்டீரிஷியன், வயர்மென், பிளம்பர் போன்ற 45 வகையான பொறியியல் தொழிற் பிரிவுகளிலும், கணினி இயக்குபவர், தையல் வேலைப்பாடு போன்ற 20 வகையான பொறியியல் அல்லாத தொழிற் பிரிவுகளிலும் பயிற்சி வழங்கப்படுகிறது. இவை தேசிய தொழிற் பயிற்சி குழுமத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட பட்டியலில் உள்ள தொழிற் பிரிவுகளாகும். தேசிய தொழிற் பயிற்சி குழுமத்தால் நிர்ணயிக்கப்பட்ட நாடு முழுமைக்குமான பொதுப்பாடத்திட்டம் அனைத்து பாடப்பிரிவுகளிலும் பின்பற்றப்படுகிறது. தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு தேசிய தொழிற் பயிற்சி குழுமத்தால் (என்சிவிடி) சான்றிதழ் வழங்கப்படுகிறது.

**மாவட்ட கலந்தாய்வு மூலம் மாணவர் சேர்க்கை**

ஒவ்வொரு வருடமும் மாவட்ட கலந்தாய்வு மூலம் மதிப்பெண் மற்றும் இன சுழற்சி அடிப்படையில் மாணவர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு அரசு தொழிற் பயிற்சி நிலையத்தின்

மூலம் மாவட்ட கலந்தாய்வு நடத்தப்படுகிறது. தரவரிசையின் அடிப்படையில் மாணவர்கள் அழைக்கப்பட்டு அவர்கள் தன் விருப்பப்படி தொழிற் பயிற்சி நிலையத்தையும் தொழிற் பிரிவையும் தேர்வு செய்யலாம். தேர்வு ஆணை உடனடியாக ஒவ்வொரு மாணவருக்கும் வழங்கப்படுகிறது. இவ்வாறு துறையால் ஒவ்வொரு வருடமும் ஜுலை மாதம் தேர்வு செய்யப்படும் மாணவர்களுக்கு சம்பந்தப்பட்ட தொழிற்பயிற்சி நிலையங்களில் தேசிய தொழிற்பயிற்சி குழும (NCVT) முறைப்படி பயிற்சி அளிக்கப்படுகிறது.

**பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படும் நலத்திட்டங்கள்**

மாணவர் சேர்க்கையை ஊக்கப்படுத்தவும், திறன் பயிற்சியில் ஈடுபாட்டுடன் பங்கேற்கவும், ஏழை மற்றும் சமூகத்தில் பின் தங்கிய இளைஞர்களுக்கு உதவிடவும், அரசு, பயிற்சி கட்டணத்தை தள்ளுபடி செய்து கட்டணமில்லா பயிற்சியை தொழிற் பயிற்சி நிலைய அனைத்து மாணவர்களுக்கும் அளித்து வருகிறது.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் தனியார் தொழிற் பயிற்சி நிலைய பயிற்சியாளர்களுக்கு பின்வரும் சலுகைகளை அரசு வழங்கி வருகிறது.

1. மாணவர்கள் வீடு மற்றும் பயிற்சி நிலையம் இடையே சென்றுவர 12 மாதகால பேருந்து பயணச் சலுகை
2. அனைத்து பயிற்சியாளர்களுக்கும் வருடத்திற்கு இரண்டு இணை சீருடைகள்
3. அனைத்து பயிற்சியாளர்களுக்கும் மிதிவண்டி
4. இனம் மற்றும் பெற்றோரின் ஆண்டு வருமானம் ஆகியவற்றை கணக்கில் கொள்ளாது அனைத்து பயிற்சியாளர்களுக்கும் மாதாந்திர உதவித் தொகை ரூ.500/– வீதம்.
5. அனைத்து பயிற்சியாளர்களுக்கும் மடிக் கணினி மற்றும்
6. அனைத்து பயிற்சியாளர்களுக்கும் பாடப்புத்தகங்கள் மற்றும் வரைபடக் கருவிகள்

**அகில இந்திய தொழிற்தேர்வு மற்றும் சான்று வழங்குதல்**

ஒவ்வொரு ஆண்டும் தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியாளர்களுக்கு தேசிய அளவில் ஒரே கால அட்டவணைப்படி பொது வினாத்தாட்கள் மூலம் தேசிய தொழிற் பயிற்சி குழுமத்தால் தொழிற்தேர்வு நடத்தப்படுகிறது.

ஜுலை 2014-ல் தேசிய தொழிற்பயிற்சி குழுமத்தின் கீழ் நடைபெற்ற அகில இந்திய தொழிற் தேர்வில் அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள பயிற்சியாளர்கள் மற்றும் துணைத் தேர்வு எழுதுவோரையும் சேர்த்து மொத்தம் 38,682 பயிற்சியாளர்கள் நம் மாநிலத்தில் தேர்வு எழுதினர். தேர்ச்சி பெற்றவர்களுக்கு தேசிய தொழிற் சான்றிதழ் (NTC) தேசிய தொழிற் பயிற்சி குழுமத்தால் (NCVT) வழங்கப்படுகிறது.

பருவ முறைத் தேர்வு ஆகஸ்ட் 2013 சேர்க்கை முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இரண்டு வருட தொழிற் பிரிவுகள் நான்கு பருவங்களையும், ஒரு வருட

தொழிற் பிரிவுகள் இரண்டு பருவங்களையும் கொண்டதாகும். ஒவ்வொரு பருவ முடிவிலும் அகில இந்திய தொழிற் தேர்வு நடத்தப்படுகிறது.

**கடந்த மூன்றாண்டுகளில் இறுதித் தேர்வில் அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் தேர்ச்சி விவரம் :–**

| வ.எண் | ஆண்டு | தேர்வு எழுதியோர் | தேர்ச்சி பெற்றோர் | தேர்ச்சி சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | 2012 | 9940 | 7571 | 76% |
| 2 | 2013 | 10907 | 8632 | 79% |
| 3 | 2014<br>பருவமுறை | 6399<br>8609 | 4861<br>5367 | 76%<br>62.34% |

**தமிழ் மொழியில் வினாத்தாட்கள் வழங்குதல்**

தொழிற் பயிற்சி நிலைய மாணவர்களுக்கு அகில இந்திய தொழிற் தேர்வு வினாத்தாட்கள் ஆங்கிலம் மற்றும் இந்தியில் மட்டுமே தேசிய தொழிற் பயிற்சிக் குழுமத்தால் வழங்கப்பட்டு வந்தது. 8-ம் வகுப்பு தேர்ச்சி மற்றும் அதற்கு மேல் உள்ள கிராமப்புற மாணவர்கள் ஆங்கிலம் மற்றும் இந்தியில் வழங்கப்படும் வினாத்தாட்களை புரிந்து

கொள்வது மிகவும் கடினமாக கருதினர். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் முயற்சியால் கடந்த ஜுலை 2012 முதல் தேசிய தொழிற் பயிற்சி குழுமத்தால் வினாத்தாட்கள் தமிழ் மொழியில் வழங்கப்பட்டு வருகின்றன.

**மாநில திறனாய்வு போட்டி**

தொழிற் பயிற்சி நிலைய பயிற்சியாளர்கள் இடையே ஆரோக்கியமான போட்டியிடும் திறமையை வளர்க்கும் வகையில், ஆண்டுதோறும் மாநில அளவில் **18** தொழிற் பிரிவுகளில் திறனாய்வு போட்டிகள் நடத்தப்பட்டு, ஒவ்வொரு தொழிற் பிரிவிலும் மாநில அளவில் முதலிடம் பெறும் சிறந்த பயிற்சியாளருக்கு ரூ.25,000/- ரொக்கப் பரிசும், தகுதிச் சான்றிதழும் வழங்கப்படுகிறது.

**அகில இந்திய திறனாய்வு போட்டி**

அகில இந்திய திறனாய்வு போட்டி ஒவ்வொரு ஆண்டும் இந்திய அரசால் 15 தொழிற் பிரிவுகளில் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு தொழிற் பிரிவுகளிலும் மாநில அளவில் முதலாவதாக வரும் சிறந்த பயிற்சியாளர்

அகில இந்திய திறனாய்வுப் போட்டிகளில் பங்கு பெற அனுமதிக்கப்படுகிறார். ஒவ்வொரு தொழிற் பிரிவிலும் அகில இந்திய அளவில் முதலாவதாக வெற்றி பெறும் பயிற்சியாளர் ஒவ்வொருவருக்கும் ரூ.50,000/- ரொக்க பரிசும், தகுதிச் சான்றிதழும் இந்திய அரசால் வழங்கப்படுகிறது.

அகில இந்திய அளவில் முதலாவதாக வரக்கூடிய பயிற்சியாளர்கள் அவர்களது பிரிவில் பெற்ற மொத்த மதிப்பெண்கள் அடிப்படையில் அகில இந்திய அளவில் முதலாவதாக வரும் மாநிலத்திற்கு சுழற்கோப்பை மற்றும் நற்சான்று இந்திய அரசால் வழங்கப்படுகிறது. இதுவரை நடைபெற்றுள்ள 50 அகில இந்திய திறனாய்வு போட்டிகளில், தமிழ்நாடு 22 முறை ''சிறந்த மாநிலம்'' என்ற விருது பெற்றுள்ளது. இதுவரை 34 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

**ஆதி திராவிட / பழங்குடி இனத்தவர்க்கான தொழிற்பயிற்சி**

ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினத்தைச் சார்ந்த இளைஞர்கள் தகுதியான வேலைவாய்ப்பினைப் பெற

அவர்களின் வேலை பெறும் தகுதியினை உயர்த்தி இதன் மூலம் இவர்களின் சமூக, பொருளாதார நிலை உயர்ந்திட வேண்டும் என்பதற்காக பல்வேறு பிரிவுகளில் தொழிற் பயிற்சி அளிக்கப்படுகிறது.

கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் ஆதி திராவிடர்களுக்கென ஒரு அரசு தொழிற்பயிற்சி நிலையம் 200 இருக்கைகளுடன் இயங்கி வருகிறது.

பழங்குடியினருக்கென விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம், கோவை மாவட்டம் ஆனைக்கட்டி, சேலம் மாவட்டம் கருமந்துறை, திருவண்ணாமலை மாவட்டம் ஜமுனாமரத்தூர், நாமக்கல் மாவட்டம் கொல்லிமலை மற்றும் நீலகிரி மாவட்டம் கூடலூர் என 6 அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள் 1215 இருக்கைகளுடன் இயங்கி வருகிறது.

**மகளிர் பயிற்சி**

கைவினைஞர் பயிற்சி திட்டத்தின்கீழ் கிண்டி, அம்பத்தூர், கரூர், ஆண்டிப்பட்டி, நாமக்கல், திண்டுக்கல், மதுரை, கோயம்புத்தூர், சேலம், நாகர்கோவில், கடலூர் மற்றும் புள்ளம்பாடி ஆகிய 12 இடங்களில் மொத்தம் 3058

இருக்கைகளுடன் பெண்களுக்கெனவே செயல்படும் 12 அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் பெண்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. மேலும், தஞ்சாவூர், இராமநாதபுரம் மற்றும் ஒசூர் ஆகிய அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் மொத்தம் **356** இருக்கைகளுடன் மகளிருக்கென தனிப்பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அனைத்து தொழிற் பயிற்சி நிலையங்களில் சேரும் மகளிர்க்கு உச்ச வயது வரம்பு கிடையாது. மேலும், அனைத்து அரசு தொழிற்பயிற்சி நிலையங்களிலும் மகளிர்க்கென 30 விழுக்காடு இட ஒதுக்கீடும் வழங்கப்படுகிறது.

**தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள்**

தற்போது தமிழ்நாட்டில் **658** அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் **68,334** இருக்கைகளுடன் செயல்பட்டு வருகின்றன. இந்த தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் தேசிய தொழிற் பயிற்சிக் குழுமத்தால் (National Council for Vocational Training) அங்கீகரிக்கப்பட்டு

அங்கீகரிக்கப்பட்ட தொழிற் பிரிவுகளில் பயிற்சிகளை வழங்கி வருகின்றன.

**தனியார் தொழிற் பயிற்சி நிலைய மாணவர்களுக்கான பயிற்சிக் கட்டணம் திரும்ப வழங்கும் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் வர விருப்பம் தெரிவிக்கும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் ஒவ்வொரு வருடமும் தங்களது தொழிற் பயிற்சி நிலையத்தில் உள்ள 50 சதவீதம் இருக்கைகளை அரசுக்கு ஒப்புவிக்கின்றன. தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களில் உள்ள மொத்த இருக்கைகளில் அரசுக்கு ஒப்புவிக்கப்படும் அரசு ஒதுக்கீடு 50 சதவீத இருக்கைளை மாவட்ட கலந்தாய்வு முறையில் நிரப்பி, இவ்வாறு சேர்க்கப்படும் மாணவர்களுக்கான பயிற்சிக் கட்டணத்தை மாநில அரசு ஏற்று தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு வழங்கி வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் திரும்ப வழங்கப்படும் பயிற்சிக்கான கட்டணம் கிராமப்புறங்களில் பயிற்சி பெறும் ஒவ்வொரு மாணவருக்கும் வருடத்திற்கு ரூ.10,000/– எனவும் நகர்ப்புறங்களில் பயிற்சி பெறும் ஒவ்வொரு

மாணவருக்கும் ரூ.12,000/– எனவும் இருக்கும். இரண்டு வருட தொழிற் பிரிவுகளை பொறுத்த வரை, கிராமப்புற தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் மாணவர் ஒருவருக்கு ரூ.20,000/- என்றவாறும், நகராட்சி மற்றும் மாநகராட்சி எல்லைக்குள் செயல்படும் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் மாணவர் ஒருவருக்கு ரூ.24,000/- என்றவாறும் பயிற்சிக் கட்டணம் வழங்கப்படும். மாணவர்களைப் பயிற்சியில் சேர்த்தல், பயிற்றுநர் பயிற்சி, பயிற்றுநர்களுக்கான ஊதியம், பயிற்சிக்கான இடம் தயார்படுத்துதல், பயிற்சிக்கான கருவிகள், நுகர்பொருட்கள், பயிற்சிக்கான தளவாடங்கள், பிற பயன்பாடுகள், தேவைப்படின் மாணவர் தங்குமிடம் மற்றும் உணவு, மாணவர்களுக்கான தேர்வு மற்றும் சான்று வழங்குதல் ஆகிய அனைத்து செயல் முறைகளுக்குமானதாக இருக்கும். 2014–2015ல் இத்திட்டத்தின் கீழ் 8322 மாணவர்கள் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களில் மாவட்ட கலந்தாய்வு மூலம் சேர்ந்துள்ளனர்.

**தனித்தேர்வர்களுக்கான தேர்வு மற்றும் சான்று வழங்குதல்**

கைவினைஞர் பயிற்சித்திட்டத்தில் குறிப்பிட்ட தொழிற் பிரிவின் சேர்க்கைக்கான குறைந்தபட்ச கல்வித் தகுதியுடன், தொழிற் பழகுநர் பயிற்சி திட்டம் செயல்படுத்தும் நிறுவனங்கள் / தொழிற் சாலை சட்டத்தின்கீழ் வரும் நிறுவனங்கள் அல்லது அரசு பதிவு பெற்ற நிறுவனங்கள் / உள்ளூர் நிறுவனங்களில் குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் அனுபவம் உள்ளவர்கள் தனித்தேர்வராக அகில இந்திய தொழிற் தேர்வு எழுத தகுதி படைத்தவர்கள் ஆவர். அகில இந்திய தொழிற் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு தேசிய தொழிற் பயிற்சி குழுமத்தால் தேசிய தொழிற் சான்று (National Trade Certificate) வழங்கப்படுகிறது. அகில இந்திய தொழிற் தேர்வில் கலந்து கொள்ளும் மாணவர்களை தேர்வு செய்ய ஆண்டுதோறும் டிசம்பர் மாதத்தில் துறையால் தகுதி தேர்வு நடத்தப்படுகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் 156 மாணவர்கள் தேர்வில் கலந்து கொண்டு, அதில் 57 நபர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

**கம்பியாள் உதவியாளர் தகுதித்தேர்வு**

வீட்டு ஒயரிங் தொழிலில் அனுபவம் மூலம் பெற்றுள்ள திறனை சோதனை செய்து சான்றிதழ் வழங்குவதற்காக 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை கம்பியாள் உதவியாளர் தகுதித் தேர்வு இத்துறையால் நடத்தப்படுகிறது. அங்கீகரிக்கப்பட்ட தொழில் நிறுவனங்களில் பணியாற்றியவர்கள் அல்லது மின்சார ஒப்பந்ததாரரிடம் குறைந்தது 5 வருட பணி அனுபவம் பெற்ற 21 வயதை அடைந்தவர்கள் இத்தேர்விற்கு தகுதியுடையவர்கள் ஆவர். டிசம்பர் 2012–ல் இத்தேர்வு கடைசியாக நடைபெற்றது. 3,113 நபர்கள் மின் கம்பியாள் உதவியாளர் தேர்வில் கலந்துகொண்டனர். தேர்ச்சி பெற்ற 2,649 நபர்களுக்கு மாநில தொழிற்பயிற்சி குழும (SCVT) சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. அடுத்த தேர்வு டிசம்பர் 2015ல் நடத்தப்படும்.

**பயிற்றுநர்களுக்கான பயிற்சித் திட்டம்**

மத்திய அரசின் கீழ் செயல்படும் சென்னையில் உள்ள மத்திய பயிற்சி நிலையம், மேம்படுத்தப்பட்ட பயிற்சி

நிலையம் மற்றும் பெங்களூரில் உள்ள உயர்தர பயிற்சி நிலையம் ஆகிய பயிற்சி நிலையங்களில் தொழிற் பயிற்சி நிலைய பயிற்றுநர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இந்த பயிற்சியானது, பயிற்றுவிப்பு நுணுக்கங்கள், பயிற்றுவிப்பில் ஒளி, ஒலி சாதனங்களைப் பயன்படுத்துதல், வகுப்பறை மேலாண்மை ஆகியவற்றில் நவீன தொழில் நுட்பத்தை கற்றுத் திறன் பெறும் வகையில் பயிற்றுநர்களைத் தயார் செய்கிறது. 2014–2015–ஆம் ஆண்டில் 292 பயிற்றுநர்கள் பயிற்சிக்கு அனுப்பப்பட்டனர். 2015–16ம் ஆண்டில் 182 பயிற்றுநர்கள் பயிற்சிக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

**டாக்டர் ராதா கிருஷ்ணன் நல்லாசிரியர் விருது**

ஒவ்வொரு ஆண்டும் 12 நல்லாசிரியர்களுக்கு (முதல்வர்கள்–2, பயிற்சி அலுவலர்-2, உதவி பயிற்சி அலுவலர்-4 மற்றும் இளநிலை பயிற்சி அலுவலர்-4) டாக்டர் ராதாகிருஷ்ணன் பெயரில் நல்லாசிரியர் விருது ரூ.10,000/- ரொக்கப் பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழுடன் வழங்கப்படுகிறது.

**திறன்மிகு மையங்கள் (அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களை மேம்படுத்துதல்)**

இத்திட்டம் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் வழங்கப்படும் பயிற்சியின் தரத்தினை தொழிற்சாலைகளின் தேவைக்கேற்றவாறு மேம்படுத்தும் பொருட்டு மத்திய அரசு உதவியுடன் செயல்படுத்தும் திட்டமாகும். இத்திட்டத்தின் மூலம் 22 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் 10 தொழிற் பிரிவுகளில் திறன்மிகு மையங்களாக (Centre of Excellance) மேம்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் முதலாமாண்டில் பல தொழிற்திறன்களை பெறுவதும் இரண்டாம் ஆண்டில் முன்னோடி மற்றும் சிறப்பு பயிற்சிகள் பெறுவதும் சிறப்பு அம்சங்களாகும். இதில் பலமுனை பயிற்சி நுழைவு மற்றும் பலமுனை பயிற்சி முடித்தல் வசதியும் உள்ளது. பயிற்சி முடிவில் இந்திய அரசின் தேசிய தொழிற்பயிற்சி குழுமத்தால் (National Council for Vocational Training - NCVT) சான்றிதழ் வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கான செலவினம் மத்திய மாநில அரசால் 75:25 என்ற விகிதத்தில் மேற்கொள்ளப்படுகிறது.

5 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்நாட்டு நிதி உதவியுடன் தலா ரூ.1.60 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டது. உலக வங்கி உதவியுடன் 14 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் தலா ரூ.3.50 கோடியிலும் , 3 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் தலா ரூ.2.00 கோடி நிதியிலும் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டம் துவக்கப்பட்டதின் மூலம் மொத்தம் 5074 பயிற்சியாளர்கள் இருக்கைகள் கூடுதலாக இந்த 22 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்த திட்டத்தின் நிதியினை பயன்படுத்தி அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு புதிய கட்டிடங்கள் கட்டிமுடிக்கப்பட்டு, கருவிகள் மற்றும் இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. நமது மாநிலத்தில் இத்திட்டம் சிறப்பாக செயலாக்கப்பட்டதனை தொடர்ந்து மத்திய அரசு 17 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு கூடுதல் நிதியாக 22.57 கோடி வழங்கியுள்ளது. மேலும், ஊக்க நிதியாக 2 உள்நாட்டு நிதி உதவி பெற்ற அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு

ரூ.3.49 கோடி வழங்கப்பட்டுள்ளது. இது வரை, ஒப்பளிக்கப்பட்ட ரூ.85.45 கோடியில் செலவினமானது ரூ.64.39 கோடியாகும்.

இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள தொழிற்பிரிவுகளின் விவரம் கீழே பட்டியலிடப்பட்டுள்ளது.

| **வ.எண்.** | **அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தின் பெயர்** | **தொழிற்பிரிவின் பெயர்** |
|---|---|---|
| **<u>உள்நாட்டு நிதியுதவி</u>** | | |
| 1. | அம்பத்தூர் | தானியங்கி ஊர்தி |
| 2. | திருச்சி | உற்பத்தி மற்றும் தயாரிப்பு |
| 3. | கோயம்புத்தூர் | உற்பத்தி மற்றும் தயாரிப்பு |
| 4. | ஒசூர் | உற்பத்தி மற்றும் தயாரிப்பு |
| 5. | சேலம் | கட்டமைப்பு ( பொருத்துநர் மற்றும் பற்றவைப்பவர்) |
| **<u>உலகவங்கி நிதியுதவி (வாழ்வியல் முன்னேற்ற பயிற்சித் திட்டம்)</u>** | | |
| 6. | கிண்டி (மகளிர்) | ஆடை தயாரித்தல் |
| 7. | வேலூர் | தோல் பொருள் மற்றும் காலணி |

| | | |
|---|---|---|
| 8 | பேட்டை, திருநெல்வேலி | மின்சாரம் |
| 9. | மதுரை | தானியங்கி |
| 10. | கிண்டி | உபசரிப்பு மேலாண்மை |
| 11. | செங்கல்பட்டு | உற்பத்தி மற்றும் தயாரிப்பு |
| 12. | வடசென்னை | கட்டுமானம் மற்றும் மரவேலைப்பாடுகள் |
| 13. | தஞ்சாவூர் | கட்டமைப்பு ( பொருத்துநர் மற்றும் பற்ற வைப்பவர்) |
| 14. | கடலூர் | குழைம வழிமுறை செயலாள் |
| 15. | கோயம்புத்தூர் (மகளிர்) | தகவல் தொழில் நுட்பம், துணி வெட்டுதல் மற்றும் தையல் வேலை, ஆடை வடிவமைத்தல் |
| 16. | தூத்துக்குடி | கட்டமைப்பு (பொருத்துநர் மற்றும் பற்ற வைப்பவர்) |
| 17. | காரைக்குடி | கட்டமைப்பு (பொருத்துநர் மற்றும் பற்ற வைப்பவர்) |
| 18. | தர்மபுரி | தானியங்கி, இயந்திர வேலையாள் மற்றும் பற்ற வைப்பவர் |
| 19. | தாராபுரம் | உற்பத்தி மற்றும் தயாரிப்பு |
| 20. | அரியலூர் | பற்ற வைப்பவர் |

| | | |
|---|---|---|
| **21.** | நாகப்பட்டினம் | பொருத்துநர் மற்றும் பற்ற வைப்பவர் |
| **22.** | திண்டுக்கல் | மின்சாரப் பணியாளர் மற்றும் நூற்பு தொழிற்நுட்பவியலாளர் |

**பொது மற்றும் தனியார் கூட்டமைப்பில் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களை மேம்படுத்துதல்**

தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு இடையேயான தொடர்பினை உருவாக்கி, தொழிற்பயிற்சி அளிப்பதில் தனியார் தொழிற்சாலைகளின் பங்களிப்பை மேம்படுத்த இத்திட்டம் துவக்கப்பட்டது. பல்வேறு நிலைகளில் **32** அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் தலா ரூ.**2.50** கோடி வட்டியில்லாக் கடனாக பெற்று அந்த நிதியானது கட்டுமானப் பணிகள், புதிய பாடதிட்டத்தின் படி இயந்திரங்கள் கொள்முதல் செய்தல், பயிற்றுநர் ஊதியம் உள்ளிட்ட பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள், தலா **5** அரசு மற்றும் தொழில் நிறுவனங்களை உறுப்பினர்களாகவும், தொழில் நிறுவனப் பிரதிநிதியை தலைவராகக் கொண்ட

நிலைய மேலாண்மைக் குழுவால் (Institute Management Committee - IMC) நிர்வகிக்கப்படுகிறது. நிலைய மேலாண்மைக் குழுவானது சங்கமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. முத்தரப்பு ஒப்பந்தத்தில் உள்ள விதி முறைகளின் படி தொழிற்பயிற்சி நிலையத்தினை நிர்வகிக்க நிலைய மேலாண்மைக்குழு அனுமதிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு மேலாண்மை குழுவிற்கு நிர்வாகம் மற்றும் நிதிக்கான அதிகாரம் அரசினால் வழங்கப்பட்டுள்ளது. தேர்ச்சிப் பெற்ற பயிற்சியாளர்களுக்கு உள்ளூர் தொழிற் நிறுவனங்களில் வேலை ஏற்படுத்தித் தரும் வகையில் திறன் தேவையினை மதிப்பீடு செய்து உரிய குறுகிய காலப் பயிற்சியினை நிலைய மேலாண்மைக்குழு வழங்குகிறது.

இத்திட்டத்திற்கென ஐந்து ஆண்டுகளில் முக்கிய செயலதிறன் குறியீடுகளை நோக்கமாகக் கொண்டு அதனை அடைவதற்கான திட்டம் அடங்கிய நிலைய மேம்பாட்டுத் திட்டத்தினை நிலைய மேலாண்மைக்குழு சங்கம் தயார் செய்து, அதற்கான ஒப்புதல் பெறப்பட்டு

திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. திட்டம் செயல்படுத்தும் ஒவ்வொரு அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்திற்கும் ரூ.2.50 கோடி நிதி வட்டியில்லாக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. இக்கடன் 10 ஆண்டுகளுக்குப் பின் இருபதாண்டுகளில் சம தவணைகளில் திரும்ப செலுத்தப்பட வேண்டும். நிர்வாகம் மற்றும் நிதி அதிகாரத்துடன் நிலைய மேலாண்மைக்குழு அரசினர் தொழிற்பயிற்சி நிலைய சேர்க்கையில் 20 விழுக்காடு இருக்கைகளை தாமே பூர்த்தி செய்து கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதுவரை இத்திட்டத்தின் கீழ் 18 தொழிற்பிரிவுகள் துவங்கப்பட்டு அதனில் 1097 இருக்கைகள் பிரேத்தியேகமாக இத்திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் தொழில் நிறுவனங்கள் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் கீழ்க்கண்ட உதவிகளை வழங்கி வருகிறது :

1. திட்ட வழிகாட்டுதலின்படி புதிய கட்டுமானப் பணிகள் மற்றும் இயந்திரக் கொள்முதல் பணிகளை மேற்கொள்ளுதல்

2. பயிற்சியாளர்களுக்கு தொழிற்சாலை பார்வையிட அனுமதி வழங்குதல்
3. பயிற்சியாளர்களுக்கு தொழிற்சாலைப் பயிற்சி வழங்குதல்
4. தொழிற்பயிற்சி நிலையங்களில் தொழிற்சாலை வல்லுநர்களைக் கொண்டு சிறப்பு விரிவுரை அளித்தல்
5. கருவிகள் மற்றும் இயந்திரப் பராமரிப்பிற்கு உதவிடுதல்
6. இயந்திரங்கள் மற்றும் கருவிகளை அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு வழங்குதல்

இத்திட்டம் செயல்படுத்தப்படும் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு இதுவரை ரூ.134 இலட்சம் மதிப்பிலான உதவிகள், கருவிகள் மற்றும் இயந்திரங்களை தொழில் நிறுவனங்கள் வழங்கியுள்ளன.

**தொழிற் பள்ளிகள்**

தமிழ்நாட்டில் 635 சுயநிதி தனியார் தொழிற் பள்ளிகள் செயல்படுகின்றன. இவை உள்ளூர் பகுதிகளில் நிலவும் வேலைவாய்ப்புக்கு ஏற்ற பிரிவுகளில்

இளைஞர்களுக்கு பயிற்சி வழங்குகின்றன. தற்போது சுமார் 22149 பயிற்சியாளர்கள் இத்தொழிற் பள்ளிகளில் பயிற்சி பெற்று வருகின்றனர். மோட்டார் வாகனம், உணவு தயாரிப்பு, மின்பணியாள், மின்னனுவியல், பற்றவைப்பவர், தையல், கணினி பயன்பாடு, அழகுக் கலை, அலுவலக நிர்வாகம் போன்ற 90 தொழிற் பிரிவுகளில் பயிற்சிகள் வழங்கப்படுகிறது. தொழிற்பிரிவிற்கு ஏற்றவாறு பயிற்சிக் காலம் 45 நாட்கள் முதல் 3 வருடங்களாக இருக்கும். எட்டாம் வகுப்பு மற்றும் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் இப்பயிற்சிகளில் சேரலாம். மாநில அளவிலான பொதுத் தேர்வு நடத்தப்பட்டு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாநில அரசு சான்று வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தில் தொழில்நுட்ப ஆசிரியர் சான்றிதழ் பயிற்சியும் வழங்கப்படுகிறது. இதில் தேர்ச்சி பெறும் மாணவர்கள் பள்ளிகளில் தொழில்நுட்ப ஆசிரியராக பணியில் சேர தகுதி பெறுகின்றனர். சிறுபான்மையின தொழிற் பள்ளிகள் உட்பட 44 தொழிற்பள்ளிகள் அரசிடமிருந்து ஒவ்வொரு வருடமும் பராமரிப்பு மானியம் பெறுகின்றன. இவற்றுள் 22

நிலையங்கள் தேசிய தொழிற்பயிற்சி குழுமத்தின் அங்கீகாரம் பெற்று தொழிற் பயிற்சி நிலையங்களாக தரம் உயர்த்திக் கொண்டுள்ளது.

**கடந்த மூன்றாண்டுகளில் தொழிற் பள்ளி இறுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றோர் விவரம் :–**

| வ.எண் | ஆண்டு | தேர்வு எழுதியோர் | தேர்ச்சி பெற்றோர் | தேர்ச்சி சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | 2012 | 18,623 | 13,688 | 73.50 |
| 2 | 2013 | 15,703 | 13,566 | 86.39 |
| 3 | 2014 | 16,707 | 14,843 | 88.84 |

**திறன் மேம்பாட்டு முனைப்பு – வேலைவாய்ப்பு திறன் எய்தும் பயிற்சி**

திறன் மேம்பாட்டு முனைப்பு (Skill Development Initiative) என்ற பெயரில் பள்ளிக் கல்வியில் இடையில் நிற்போர் மற்றும் கல்லூரி கல்வியில் இடையில் நிற்போரின் திறன் மேம்பாட்டிற்காக குறிப்பாக வரவேற்பு அதிகம் உள்ள தொழிற்பிரிவுகளில் குறைந்த காலத்திறன் எய்தும் குறுகிய காலத் தொழிற்பிரிவுகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

பல்வேறு நிலைகளில் பயிற்சியில் சேருதல், பயிற்சியினை முடித்தல் எனத் தேர்ந்தெடுக்கும் நேர்வைக் கொண்டதாகவும், பயிற்சியளிப்பதில் நெகிழ்வுகளைக் கொண்டதாகவும் வாழ்நாள் முழுவதும் கற்றலுக்கும் இத்திட்டம் வழிவகை செய்கிறது. 14 வயதிற்கு மேற்பட்ட 5–ம் வகுப்பு முடித்தவர்களுக்கு ஏற்ற பயிற்சிகளும் இத்திட்டத்தில் உள்ளன. பாகுபாடற்ற தேர்வு முறையை உறுதி செய்ய, பயிற்சி முடித்தோருக்கான தேர்வு, பயிற்சி அளிக்கும் பணியில் பங்கு பெறாத தனித்தேர்வு அமைப்புகள் (Independent Assessing Bodies) மூலம் நடத்தப்படுகின்றன. இத்திட்டத்தில் 565 தொழிற்பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளது. பயிற்சியாளர்களின் திறனைக் கண்டறிய 35 தனித்தேர்வு அமைப்புகள் உள்ளன. 2014-2015 நிதியாண்டில் 12,352 நபர்கள் பயிற்சியில் சேர்ந்து பயிற்சி பெற்று வருகின்றனர்.

இத்திட்டம் மத்திய அரசு நிதி பங்களிப்பில் 100 சதவீதம் பயிற்சிக் கட்டணத்தை பயிற்சியளிக்கும் நிறுவனங்களுக்கு வழங்கும் வகையில்

வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 1099 பதிவு செய்யப்பட்ட தொழிற்கல்வி பயிற்சி நிறுவனங்களால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதில் 62 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள், 13 மத்திய சிறைச்சாலைகள், 1 மத்திய அரசு நிறுவனம் மற்றும் 1023 தனியார் நிறுவனங்கள் அடங்கும்.

ஏழை மாணவர்களின் சுமையைக் குறைப்பதற்காக அரசு தொழிற்பயிற்சி நிலையங்களின் பயிற்சிக் கட்டணத்தை மாநில அரசே ஏற்றுக் கொள்கிறது. இத்திட்டத்தின் கீழ் 2014-2015-ஆம் ஆண்டில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மூலம் 1888 நபர்களுக்கும், தனியார் பயிற்சி நிறுவனங்கள் மூலம் 10464 நபர்களுக்கும் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது.

**தொழிற்பழகுநர் பயிற்சித் திட்டம்**

இந்தியாவில் தொழிற் பழகுநர் சட்டம் **1961** ஆம் ஆண்டு தொழிற் நிறுவனங்களில் முதன் முதலில் நடைமுறைப்படுத்தப்பட்டது. அவ்வாறு தொழிற் பழகுநர் சட்டம் நடைமுறைபடுத்த தொழிற் நிறுவனங்களை

கண்டறிந்து அதில் பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப நிர்ணயிக்கப்பட்ட விகிதாச்சாரப்படி தொழிற்பழகுநர்கள் நிறுவனங்களில் நியமனம் செய்யப்படுகின்றனர். தொழிற் பழகுநர் பயிற்சி நிறுவனங்களில் நடைமுறைப்படுத்தப்படும்போது பயிற்சிக்கான பாடதிட்டம் / பயிற்சிக்கான கால அளவு போன்றவை மத்திய தொழிற் பயிற்சி பழகுநர் குழுமம் (Central Apprenticeship Council) மூலம் நிர்ணயிக்கப்படுகிறது.

தொழிற் பழகுநர்களுக்கு பயிற்சி 6 மாதத்தில் இருந்து 4 ஆண்டுகள் வரை அளிக்கப்படுகிறது. தொழிற் பழகுநர் பயிற்சியானது கைவினைஞர் பயிற்சி திட்டத்தின் கீழ் தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று தேர்ச்சி பெற்று தேசிய தொழிற் சான்றிதழ் (National Trade Certificate - NTC) பெற்ற மாணவர்களுக்கும் பள்ளிப்படிப்பு முடித்த மாணவர்களுக்கும் தொழிற்நிறுவனங்களில் அளிக்கப்படுகிறது. தொழிற் பயிற்சி நிலையங்களில் அளிக்கப்படும் பயிற்சியின் மூலம் பயிற்சியாளர்கள் பகுதி திறன் பெற்ற (Semiskilled)

தொழிலாளர்களாகவும், அதன் பின்னர் தொழிற் பழகுநர் பயிற்சியின் மூலம் அவர்களை முழு திறன் வாய்ந்த (Skilled) தொழிலாளர்களாகவும் மாற்றப்படுகிறார்கள். தொழிற்பழகுநர்கள் தொழிற்நிறுவனங்களில் நேரடியாக பணிமனைகளில் செய்முறைப் பயிற்சியினைப் பெறுகின்றனர்.

தொழிற்பயிற்சி நிலையத்தில் தேர்ச்சி பெற்ற பயிற்சியாளர்களுக்கு (NTC சான்றிதழ் பெற்ற பயிற்சியாளர்கள்) தங்கள் பெயர்களை அரசினர் தொடர் அறிவுரை மையங்களில் பதிவு செய்வதன் மூலமும் நேரடி நேர்காணல் மூலமும் தனியார் நிறுவனங்களில் தொழிற்பழகுநர் பயிற்சியில் கிடைக்கப் பெறுகிறது. வேலைவாய்ப்பு அலவலகம் மூலம் பொதுத்துறை நிறுவனங்களில் தொழிற்பழகுநர் பயிற்சியில் தேர்வாகின்றனர். 2014-2015-ஆம் ஆண்டில் 9536 தொழிற்பழகுநர்கள் தொழிற்பழகுநர் பயிற்சியில் சேர்ந்தனர். தொழிற்பழகுநர் பயிற்சி முடித்த 5484 தொழிற்பழகுநர்கள், தொழிற்பழகுநருக்கான அகில இந்திய தொழிற்தேர்வு எழுதினர்.

தொழில் பழகுநர்களுக்கான உதவித் தொகையானது **22.09.2014**–முதல் கீழ்க்கண்டவாறு மத்திய அரசால் உயர்த்தி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| முதல் ஆண்டு | – | மாநில அரசால் நிர்ணயம் செய்யப்படும் பகுதி திறன் பெற்ற (semi skilled workers) தொழிலாளர்களின் குறைந்த பட்ச ஊதியத்தின் **70** விழுக்காடு . |
| இரண்டாம் ஆண்டு | – | மாநில அரசால் நிர்ணயம் செய்யப்படும் பகுதி திறன் பெற்ற (semi skilled workers) தொழிலாளர்களின் குறைந்த பட்ச ஊதியத்தின் **80** விழுக்காடு. |
| மூன்றாம் ஆண்டு மற்றும் நான்காம் ஆண்டு | – | மாநில அரசால் நிர்ணயம் செய்யப்படும் பகுதி திறன் பெற்ற (semi skilled workers) தொழிலாளர்களின் குறைந்த பட்ச ஊதியத்தின் **90** விழுக்காடு . |

தமிழ்நாட்டில் **11** அரசினர் தொடர் அறிவுரை மையங்களான (Related Instruction Centres - RIC), கிண்டி, அம்பத்தூர், வடசென்னை, வேலூர், சேலம், கோயமுத்தூர், ஒசூர், கடலூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி மற்றும் **3** அரசினர் தொழிற் பயிற்சி

நிலையங்களான தஞ்சாவூர், மேட்டூர் அணை, தாராபுரம் ஆகிய நிலையங்களில் **111** தொழிற்பிரிவுகள் அமல்படுத்தப்படுகிறது. மேலும், தொழிற்பழகுநர் பயிற்சியினை முடித்த தொழிற் பழகுநர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மற்றும் அக்டோபர் மாதங்களில் அகில இந்திய தொழிற் பழகுநர் தேர்வு நடத்தப்பட்டு அதில் தேர்ச்சி பெறும் தொழிற் பழகுநர்களுக்கு தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ் (National Apprenticeship Certificate – NAC) வழங்கப்படுகிறது. நமது மாநிலத்தில் **641** மாநில அரசு தொழிற் நிறுவனங்களிலும் **1773** தனியார் தொழிற் நிறுவனங்களிலும் ஆக மொத்தம் **2414** தொழிற்நிறுவனங்களில் தொழில் பழகுநர் பயிற்சி வழங்கப்படுகிறது. மேலும் நம் மாநிலத்தில் உள்ள **105** மத்திய அரசு தொழிற்நிறுவனங்களிலும் தொழிற் பழகுநர் பயிற்சி வழங்கப்படுகிறது.

16.10.2014 அன்று மத்திய அரசால் தொழிற்பழகுநர் புரோட்சகன் யோஜனா (Apprentice Protsahan Yojana Scheme) திட்டம் துவக்கப்பட்டது.

இத்திட்டத்தில் சிறு, குறு தொழில் நிறுவனங்களில் தொழிற்பழகுநர் பயிற்சி பெறும் தொழிற்பழகுநர்களுள் அதிகபட்சம் **2** தொழிற்பழகுநர்களுக்கான மாதாந்திர உதவித் தொகையில் **50%**–ஐ மத்திய அரசால் ஏற்கப்படுகிறது.

நமது மாநிலத்தில் **23** அடிப்படை பயிற்சி மையங்கள் தொழில் நிறுவனங்களில் செயல்படுகிறது. அவற்றில் **10**ம் வகுப்பு தேர்ச்சிப் பெற்றவர்கள் தொழிற்பழகுநர்களாக சேர்கிறார்கள். இப்பயிற்சி மையங்களில் ஒவ்வொரு வருடமும் **868** தொழிற்பழகுநர்கள் சேரும் வகையில் இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தொழிற்பழகுநர்கள் பயிற்சி பெறும் தொழிற் பிரிவிற்கேற்ப பாட திட்டத்தின்படி முதலில்அடிப்படை பயிற்சி மையத்தில் பயிற்சி பெறுகின்றனர். இது தொழிற் பயிற்சி நிலையங்களில் பெறக் கூடிய பயிற்சியினை போன்றதாகும். பின்னர் தொழிற்நிறுவனத்தில் பணி மனையில் பயிற்சி பெறுகின்றனர். இதன்மூலம் வேலையுடன் கூடிய பயிற்சியினை நேரடியாகப் பெறுகிறார்கள். இந்த

தொழிற்பழகுநர்கள், தொழிற்பழகுநர் பயிற்சியினை முடித்து நேரடியாக தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ் பெறுகிறார்கள்.

**சாதனைகள் மற்றும் முனைப்பு நடவடிக்கைகள்**

**அ) 15 புதிய தொழிற் பயிற்சி நிலையங்களைத் தொடங்குதல்**

மாநிலத்தில் தொழில் திறன்பெற்றவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நடவடிக்கையில், வரலாற்றுச் சாதனையாக **2013–2014**ல் போடி, வேப்பலோடை, அருப்புக்கோட்டை, இராதாபுரம், திருவையாறு, கருமந்துறை, ஆனைக்கட்டி, கூடலூர், ஜமுனாமரத்தூர் மற்றும் கொல்லிமலை ஆகிய இடங்களில் **10** புதிய தொழிற் பயிற்சி நிலையங்கள் இவற்றிற்கான புதிய வகுப்பறைகள் மற்றும் பணிமனைகள் கட்டுவதற்காகவும், கருவிகள் மற்றும் தளவாடங்கள் கொள்முதல் செய்வதற்காகவும், பணியாளர்களின் சம்பளம் போன்றவற்றிற்கான செலவினத்தை உள்ளடக்கி ரூ.**50.89** கோடி செலவில் அரசால் தொடங்கப்பட்டுள்ளன. மேலும், **2014–2015**–ஆம் ஆண்டில் மணிகண்டம்,

சின்னசேலம், காட்டுமன்னார்கோவில், கடையநல்லூர் மற்றும் உடுமலைப்பேட்டை ஆகிய இடங்களில் 5 புதிய தொழிற் பயிற்சி நிலையங்கள் இப்பகுதியில் வசிக்கும் கிராமப்புற இளைஞர்கள் திறன்பயிற்சி பெற்று மேம்பாடு அடைந்துள்ள பிற பகுதியிலுள்ளவர்களுக்கு இணையாக செயல்படும் வகையில் அரசால் தொடங்கப்பட்டுள்ளது.

**ஆ) அரசு தொழிற் பயிற்சி நிலையங்களை தரம் உயர்த்துதல்**

நவீன தொழில் நுட்பத்தில் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும் என்பது இந்த அரசின் ஒரு முக்கிய கொள்கையாகும். தற்போது செயல்படும் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் வழங்கப்படும் பயிற்சி மேம்படுத்தப்பட்ட பயிற்சி சூழலில் நவீனமானதாகவும், தரமாகவும் இருப்பதற்காக நவீன இயந்திரங்கள், வகுப்பறை அறைகலன்கள் கொள்முதல் செய்து வழங்கவும், கட்டடங்கள் புனரமைப்பிற்காகவும் ரூ.65.75 கோடி ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிட்டுள்ளது. தரம் உயர்த்தும் பணிகள் நடைபெற்று வருகிறது.

**இ) பயோ–மெட்ரிக் வருகை பதிவு முறை**

பயிற்றுநர்கள் மற்றும் மாணவர்கள் பயிற்சிக்கு உரிய நேரத்திற்கு வருகை புரிவதை உறுதிப்படுத்திட அனைத்து அரசு தொழிற் பயிற்சி நிலையங்களிலும் பயோ–மெட்ரிக் வருகை பதிவு முறையை அறிமுகப்படுத்தி அரசு ஆணையிட்டுள்ளது. அனைத்து அரசு தொழிற் பயிற்சி நிலையங்களிலும் பயோ–மெட்ரிக் கருவிகள் ரூ.**50.55** இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளன.

## தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்

தமிழ்நாடு திறன் மேம்பாடு இயக்கம் 2009–ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு பின்னர் சங்கமாக பதிவு பெற்றது. தமிழகத்தில் திறன் எய்தியவர்களை அதிகரிக்கும்பொருட்டும் திறன் எய்தியவர்களை அதிகரித்து அதன்மூலம் தொழில் நிறுவனங்களின் மனித வளத் தேவைகளை பூர்த்தி செய்வதும், தொழில் நிறுவனங்களின் மூலதனத்தினை அதிக அளவில் ஈர்ப்பதும் முக்கிய நோக்கமாகும். தமிழகத்தில் ஓர் ஆய்வின்படி, 2016–2017–ஆம் ஆண்டில் திறன் பெற்ற தொழிலாளர்களின் தேவையானது 68 இலட்சம் என கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எனவே இத்திறன் இடைவெளியினை சரிகட்டும்வண்ணம் சங்கமாகச் செயல்பட்டு வந்த நிறுவனத்தை இலாபம் ஈட்டா பிரிவு 25 கம்பெனியாக 2013–ஆம் ஆண்டில் மாற்றப்பட்டது. தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023–ன்படி 20 மில்லியன் நபர்களுக்கு 2023–க்குள் திறன் பயிற்சி வழங்கப்பட வேண்டும். இந்நோக்கத்தினை பூர்த்தி செய்யும்வகையில்,

இந்த அரசு முன்னோடி முக்கியத்துவத்தினை அளித்து தகுதிபெற்ற அதிக அளவிலான திறன் பெற்றவர்களை உருவாக்குவதில் முதன்மை அளிக்கின்றது. இதன்மூலம், தமிழகம் நாட்டிலேயே திறன் பெற்றவர்களின் கேந்திரமாக மாற்றம் செய்யப்படும். இதன் விளைவாக அதிக அளவில் பன்னாட்டு நிறுவனங்களின் முதலீடுகளை மாநிலத்தில் ஈர்க்கவும் அதன்மூலம் அதிக அளவிலான வேலைவாய்ப்பினை இளைஞர்கள் பெறும் வகையில் உருவாக்கப்படும்.

இந்நோக்கத்தினை முன் நடத்திச் செல்ல அரசு இந்நிறுவனம் சிறப்பு பொருள் வாகனமாக (Special Purpose Vehicle – SPV) **2013–**ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டது. மேலும், மாநிலத்தில் வழங்கப்படும் அனைத்து திறன் எய்தும் பயிற்சிகளுக்கான ஒருங்கிணைப்பு முகமையாகவும் (Nodal Agency) தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் அவ்வாண்டில் அறிவிக்கப்பட்டது.

இதன்படி, வேலைவாய்ப்பு அதிகம் உள்ள துறைகளாக தமிழ் நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் பின்வரும் முக்கியத் துறைகளை இனமறிந்துள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | மோட்டார் வாகனம் | 8. | வாகனம் ஓட்டுதல் |
| 2. | கட்டுமானம் | 9. | விருந்தோம்பல் |
| 3. | தோல் | 10. | இலகு பொறியியல் |
| 4. | ஜவுளித் துறை | 11. | தொலைத்தொடர்பு |
| 5. | வங்கி நிதிச் சேவை | 12. | சூரியசக்தி |
| 6. | மருத்துவப் பணிகள் | 13. | ஊடகத் துறை |
| 7. | பாதுகாப்புச் சேவைகள் | 14. | சில்லரை வர்த்தகம் |

இதன்படி, புகழ்பெற்ற தனியார் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்கள் திறன் எய்தும் பயிற்சி வழங்க இனமறியப்பட்டுள்ளது. இவ்வாறு திறன் எய்தும் பயிற்சி வழங்குபவர்கள் குறைந்தபட்சம் 70 சதவிகித வேலைவாய்ப்பினை பெற்றுத் தர வேண்டும். அரசு ஒவ்வொரு ஆண்டும் திறன் பயிற்சிக்கு

ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த ஆண்டு திறன் எய்து பயிற்சிக்கு ரூ.150 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தொழில் பிரிவு வாரியாக சாதனை விவரங்கள்:-**

| வரிசை எண். | தொழிற்பிரிவுகள் | பயிற்சி பெற்றவர்கள் | | |
|---|---|---|---|---|
| | | 2012–2013 | 2013–2014 | 2014–2015 |
| *1.* | மென்பொருள் மற்றும் தொலைத் தொடர்புத் துறை | *21500* | *19100* | *7993* |
| *2.* | ஜவுளித்துறை | *3600* | *400* | *13059* |
| *3.* | கட்டுமானத் துறை | *3500* | | *3500* |
| *4.* | வாகனங்கள் மற்றும் பொருள் போக்குவரத்து துறை | - | 25202 | *3740* |
| *5.* | ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு | - | 1300 | *2700* |
| *6.* | பிளாஸ்டிக் பொறியியல் | | 200 | *590* |
| *7.* | சில்லறை வர்த்தகம் | - | 10000 | - |
| *8.* | தோல் | | 120 | *3080* |

| | | | | |
|---|---|---|---|---|
| *9.* | மருத்துவப் பணிகள் மற்றும் விருந்தோம்பல் | - | 2360 | *2540* |
| *10.* | சூரிய சக்தி | - | 500 | - |
| *11.* | அழகுக் கலை | - | 50 | *120* |
| *12.* | பாதுகாப்புச் சேவைகள் | - | 25000 | - |
| *13.* | இலகு பொறியியல் | | 2987 | *3785* |
| *14.* | வங்கி, நிதி மற்றும் காப்பீடு சேவை | - | - | 2200 |
| *15.* | விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த துறைகள் | - | - | 1630 |
| *16.* | பிற துறைகள் | 20750 | 68625 | 22860 |
| மொத்தம் | | **49,350** | **1,59,444** | **67,797 *** |

*** 2014–2015–**ஆம் ஆண்டில் **1,04,723** நபர்களுக்கு பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டது. மீதமுள்ள **36,926** நபர்களுக்கு தற்போது பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

## IV. அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

### அறிமுகம்

வெளிநாட்டு வேலைக்காக செல்ல விரும்பும் தமிழர்கள், போலி முகவர்களிடம் ஏமாறாமல் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற வேண்டும் என்ற நோக்கத்தில் தமிழக அரசால் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் 1956–ஆம் ஆண்டு இந்திய கம்பெனிகள் சட்டத்தின்கீழ் 30.11.1978 அன்று தொடங்கப்பட்டது. இது தமிழ்நாடு அரசு சார்ந்த பொதுத்துறை நிறுவனமாகும். இந்நிறுவனத்தின் தலையாய நோக்கம் வெளிநாட்டு வேலை தேடும் இந்தியர்களை குறிப்பாக தமிழர்களை வெளிநாடுகளில் பணியமர்த்துவதாகும். இந்நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ.50 இலட்சம் மற்றும் பெறப்பட்ட மூலதனம் ரூ.15 இலட்சம் ஆகும்.

**செயல்பாடுகள்**

**பதிவு**

இந்நிறுவனம் மூலம் வெளிநாட்டில் வேலைவாய்ப்பு வேண்டி 31.3.2014 வரை **19,959** பேர் பதிவுசெய்து காத்திருக்கின்றனர். 2014–2015–ஆம் ஆண்டில் **2239** பேர் பதிவு செய்துள்ளனர்.

**பணியமர்த்தல்**

இந்நிறுவனத்தின் சேவை தொடங்கப்பட்ட காலம் முதல் 31.3.2014 வரை **8217** பதிவர்களும், 2014–2015–ஆம் ஆண்டில் **252** பதிவர்களும் பல்வேறு நாடுகளில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இந்நிறுவனம், வெளிநாட்டு வேலைதேடும் நமது இளைஞர்களுக்கு வழிகாட்டுவதுடன் அவர்கள் வேலையில் சேர உதவுவதிலும், அந்நியச் செலவாணியை ஈட்டுவதிலும் நாட்டுக்கு தனது பங்களிப்பை அளித்துள்ளது.

**நிதி நிலை**

மாநில அரசைச் சார்ந்த பொது நிறுவனமான அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் 2013-2014–ஆம் ஆண்டில் **ரூ.5.89** இலட்சம் வரிக்குப்பின் இலாபம் ஈட்டியுள்ளது. 2014-2015–ஆம் ஆண்டில் 31.3.2015 வரை தணிக்கைக்குட்படாத வகையில் இலாபமாக **ரூ.45.16** இலட்சம் ஈட்டியுள்ளது.

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம், **2014-2015**–ஆம் ஆண்டில் முதன்முறையாக ஆஸ்திரேலியா நாட்டிற்கு **5** மனுதாரர்களை பணியமர்த்தியுள்ளது. மேலும், அதிக மனுதாரர்களை ஆஸ்திரேலியா நாட்டில் பணியமர்த்துவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது.

## V. மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரகம்

## (தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம்)

**1948–**ஆம் ஆண்டு பாராளுமன்றத்தினால் இயற்றப்பட்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி சட்டத்தில் உள்ள விதிமுறைகளின்படி, தொழிலாளர் மாநில காப்புறுதி கழகம் எனும் கூட்டாண்மை அமைப்பினால் தொழிலாளர் அரசு திட்டம் நிர்வகிக்கப்படுகிறது. இத்திட்டத்தில் பதிவு செய்துகொண்ட தொழிலாளர்களுக்கு உழைக்க இயலாதநிலை ஏற்படும்போது, வேலைக்குத் திரும்பும் வரை முழு மருத்துவ வசதி அளிக்கப்படுகின்றது.

தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் என்பது அமைப்பு சார்ந்த துறைகளில் உள்ள தொழிலாளர்களுக்கு ஏற்படும் நோய்கள், மகப்பேறு, பணியின்போது ஏற்படும் விபத்து, காயம் காரணமாக ஏற்படும் இயலாமை மற்றும் மரணம் போன்ற நிகழ்வுகளில் சமூகப் பாதுகாப்பினை நிறைவேற்றும் விதமாக ஏற்படுத்தப்பட்ட விரிவான திட்டமாகும்.

தமிழ்நாட்டில் 210 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் (203 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள், 5 நடமாடும் மருந்தகஙகள், 2 பயனீட்டாளர்கள் மருந்தகங்கள்) மற்றும் 10 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மூலம் (7 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மாநில அரசின் கட்டுப்பாட்டிலும் 3 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் தொழிலாளர் மாநில காப்புறுதி கழகத்தின் நேரடி கட்டுப்பாட்டிலும் இயங்குகின்றன) மருத்துவ சேவை அளிக்கப்பட்டு வருகிறது. இம்மருத்துவமனைகளில் உள்ள மொத்த படுக்கைகளின் எண்ணிக்கை 2011 ஆகும்.

**தமிழ்நாட்டில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்ட நிர்வாக அமைப்பு**

இத்திட்டம் மாநில அரசின் சார்பில் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகளின் இயக்குனர் (தொ.அ.ஈ) நிர்வகிக்கின்றார். நிர்வாக வசதிக்காக நான்கு மண்டல நிர்வாக மருத்துவ அலுவலர்கள் (தொ.அ.ஈ.) மற்றும் ஏழு

மருத்துவமனை கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்தினால் கீழ்காணும் பயன்கள் தொழிலாளர்களுக்கும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்கும் வழங்கப்படுகிறது.

**உடல் நலமின்மை உதவி**

காப்பீட்டாளர் உடல் நலமின்றி பணிக்கு செல்ல இயலாத நிலை ஏற்படும்போது, உரிமையளிக்கப்பட்ட காப்பீட்டு மருத்துவ அலுவலரின் சான்றிதழின் பேரில் உடல் நலமின்மை உதவி பணமாக வழங்கப்படுகிறது. ஆறு மாத காலத்தில் 78 நாட்களுக்குண்டான சந்தா தொகையினை செலுத்திய காப்பீட்டு நபர் இவ்வுதவியினைப்பெற தகுதியுடையவராகிறார்.

**உடல் நலமின்மைக்கான நீட்டித்த கூடுதல் உதவி (பணமாக)**

குறிப்பிட்ட 34 வகையான நீண்டகால நோய்களில் காப்பீட்டாளருக்கு சிகிச்சையும் மருத்துவரின் ஆலோசனையின் பேரில் பணிக்குச் செல்ல

இயலாதகாலங்களில் மருத்துவ ஆலோசனையின்பேரில், விடுப்பிலிருக்கும் நாட்களுக்கு உடல் நலமின்மைக்கான நீட்டித்த பண உதவி வழங்கப்படுகிறது.

**உயர்த்தி வழங்கும் உடல் நலமின்மைக்கான உதவி (பணமாக)**

ஆறு மாத காலத்தில் 78 நாட்களுக்குண்டான சந்தா தொகையினை செலுத்திய காப்பீட்டு நபர் இவ்வுதவியினைப்பெற தகுதியுடையவராகிறார். கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொள்ள தகுதி வாய்ந்த வயதில் உள்ள காப்பீட்டாளர்கள் கருத்தடை (வாசக்டமி / ட்யூபக்டமி) செய்து கொள்ளும்போது, உயர்த்தி வழங்கும் உடல்நலமின்மைக்கான உதவி வழங்கப்படுகிறது.

**மருத்துவ உதவி**

தொழிலாளர் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு காப்புறுதி வசதியுள்ள நிறுவனத்தில் வேலையில் சேர்ந்த நாள் முதல் முழுமையான மருத்துவ வசதிகள் அளிக்கப்படுகின்றன. ஆரம்பகால சிகிச்சை, சிறப்பு சிகிச்சை மற்றும் உயர் சிறப்பு சிகிச்சை ஆகியவை

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள், மருத்துவமனைகள் மற்றும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள தனியார் மருத்துவமனைகள் மூலம் அளிக்கப்படுகின்றன.

**பேறுகால உதவி**

பெண் காப்பீட்டாளருக்கு, பேறுகாலத்தில் அல்லது கருக்கலைப்பு காலத்தில் பேறுகால உதவியாக 84 நாட்களும், பேறுகால அல்லது அது தொடர்பான நோய்களுக்கான சிகிச்சைக்கு மேலும் 30 நாட்களும் உதவியாக அளிக்கப்படுகிறது. ஒரு வருடத்தில் 70 நாட்களுக்குண்டான சந்தா தொகையினை செலுத்திய பெண் காப்பீட்டு நபர் இவ்வுதவியினைப் பெற தகுதியுடையவராகிறார்.

**ஊனமுற்றோருக்கான உதவி (பணமாக)**

காப்பீட்டாளர்கள் பணிபுரியும் போது ஏற்படும் விபத்தினால் விளையும் உடல் நலக்குறைகளுக்கும் தொழில் வழி நோய்களுக்கும் ஊனமுற்றோருக்கான உதவி வழங்கப்படுகிறது.

**(அ) தற்காலிக ஊனமுற்றோருக்கான உதவி (பணமாக)**

ஈட்டுறுதி பெறத்தகுந்த வேலையில் சேர்ந்த நாள் முதலே காப்பீட்டாளருக்கு தற்காலிக ஊனம் ஏற்படும்போது தற்காலிக ஊனம் தொடரும் வரை, 70 விழுக்காடு ஊதியம் உரிமையளிக்கப்பட்ட காப்பீட்டு மருத்துவ அலுவலரின் சான்றிதழின்பேரில் வழங்கப்படுகிறது.

**(ஆ) நிரந்தர ஊனமுற்றோருக்கான உதவி (பணமாக)**

ஈட்டுறுதி பெறத்தகுந்த வேலையில் சேர்ந்த நாள் முதலே நிரந்தர ஊனம் உள்ள காப்பீட்டாளருக்கு அவர்தம் வாழ்நாள் முழுவதும் வழங்கப்படுகிறது.

**சார்ந்துள்ளோர் உதவி (பணமாக)**

வேலை செய்யும் போது ஏற்படும் விபத்தினால் அல்லது அவர் செய்யும் தொழிலினால் ஏற்பட்ட நோயினால் காப்பீட்டாளர் இறந்துவிட்டால், அவரைச் சார்ந்துள்ளவர்க்கு சார்ந்தோருக்கான உதவி வழங்கப்படுகிறது.

**இறுதிச் சடங்கிற்குரிய உதவி (பணமாக)**

ஈட்டுறுதி பெறத்தகுந்த வேலையில் சேர்ந்த நாள் முதலே காப்பீட்டாளரின் இறுதிச் சடங்கிற்கு அதிகபட்சமாக ரூ.10,000./– வழங்கப்படுகிறது.

**வேலை இழந்தோருக்கான உதவி (பணமாக)**

3 வருடம் தொடர்ந்து வேலை பார்த்தபின், பணியிடங்களில் பணியாளர் குறைப்பு, இதர எதிர்பாராத காரணங்களால் வேலை இழக்கும் காப்பீட்டாளருக்கு தொழிலாளர் மாநில காப்புறுதி கழகம் வேலை இழந்தோருக்கான படியினை வழங்குகிறது. ‘‘ராஜீவ் காந்தி சிரமிக் கல்யாண் யோஜ்னா வேலை இழந்தோர் படிகள்’’ திட்டத்தின் கீழ் அவர் கடைசியாக வாங்கிய சம்பளத்தின் 50 விழுக்காடு ஒரு வருடத்திற்கு பெறத்தகுதியுடைவராகிறார்.

**காப்பீட்டு பயனாளிகள் தனியார் மருத்துவமனைகளில் செய்துகொண்ட சிகிச்சைக்கான செலவினைத் திரும்ப வழங்கல்.**

**சுழற்சி நிதி**

மாநில அரசால் 2004–ஆம் ஆண்டில் 'சுழற்சி நிதி' உருவாக்கப்பட்டது. காப்பீட்டாளர்கள் தனியார் மருத்துவமனைகளில் மருத்துவ சிகிச்சைக்காக செலவிட்ட தொகையை தாமதமில்லாமல் திரும்ப பெருவதற்காக இது உருவாக்கப்பட்டது. சிறப்பு மற்றும் அதிசிறப்பு சிகிச்சை பட்டியல்களுக்கும் திரும்ப வழங்கப்படுகின்றன. 2013–2014–ஆம் ஆண்டில் ரூ.15,01,80,912/– மதிப்பிலான தனியார் மருத்துவமனைகளில் எடுத்துக்கொண்ட சிறப்பு / அதிசிறப்பு சிகிச்சை பட்டியல்கள் 8,496 காப்பீட்டு நபர்களுக்கு பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

2014–2015–ஆம் ஆண்டில், 9,274 காப்பீட்டு நபர்களுக்கு ரூ.19,93,38,927/– ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

**செறிவுத்திட்டம்**

காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கு சிறப்பு மற்றும் உயர்சிறப்பு சிகிச்சை எடுத்துக்கொள்வதற்கு வசதியாக 164 தனியார் மருத்துவமனைகள், மருத்துவத்திற்காக செறிவு திட்டத்தின்கீழ் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளன. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களின் பரிந்துரையின் பேரில் தனியார் மருத்துவமனைகளில் காப்பீட்டு நபர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களும் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். காப்பீட்டு நபர்கள் சிகிச்சைக்குப்பின்னர் தனியார் மருத்துவமனைகளுக்கு மருத்துவ சிகிச்சை செலவினை செலுத்தவேண்டியதில்லை. சிகிச்சைக்குப் பின்பு தனியார் மருத்துவமனை பட்டியல்கள் தொழிலாளர் மாநில காப்புறுதி கழகத்தால் நேரிடையாக செறிவு திட்டம் மூலம் நேர் செய்யப்படுகிறன. 2013–2014–ஆம் ஆண்டில், 57,667 நபர்களுக்கு ரூ.26,26,03,973/– மதிப்பிலான பட்டியல்கள்

தனியார் மருத்துவமனைகளுக்கு பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

**2014–2015**–ஆம் ஆண்டில், **91,503** காப்பீட்டு நபர்களுக்கு ரூ.**29,77,88,737/–** ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

**இதர உதவிகள்**

1. வயது மூப்பு காரணமாக பணி ஓய்வு பெற்றவர்களிடமிருந்து குறைந்த பட்ச தொகையாக ரூ.**120/–** பெற்று, அவருக்கும் அவரது துணைக்கும் முதியோர் மருத்துவ வசதி அளிக்கப்படுகின்றது.
2. இத்திட்டத்தின் கீழ், காலிழந்தோர் பயன்படுத்தும் ஊன்றுகோல் மற்றும் செயற்கைகால், சக்கர நாற்காலி, பல்செட், மூக்கு கண்ணாடி போன்ற சாதனங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன.
3. வரும்முன் காக்கும் திட்டங்களான நோய் தடைக்காப்பு, எச்ஐவி / எயிட்ஸ் நோய்

கண்டுபிடித்து சிகிச்சை அளித்தல் போன்ற வசதிகளும் உள்ளன.

4. குடும்பநலத்திட்டம், காசநோய் சிகிச்சை ஆகிய தேசிய திட்டங்களும் அமுல்படுத்தப்படுகின்றன.
5. காப்பீட்டாளரின் மனைவி மற்றும் பெண் காப்பீட்டாளர்கள் பேறுகாலத்தில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் சிகிச்சை பெறாதிருந்தால் மருத்துவ ஊக்கத் தொகையாக ரூ.5,000/– அளிக்கப்படுகிறது.

**தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தில் சேர்வதற்கான தகுதிகள்**

நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளில் பணிபுரியும் ரூ. 15,000/– வரை ஊதியம் பெறும் பணியாளர்கள் இத்திட்டத்தின் கீழ் சேர்க்கப்படுகின்றார்கள். ஆயினும் ரூ.25,000 மாத ஊதியம் பெறும் மூளை வளர்ச்சி குறைபாடுகள் நோயுடைய மாற்றுத்திறனாளிகளும் இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

தொழிலாளர்களின் ஊதியத்தில் 1.75 சதவீதம் தொழிலாளர்கள் பங்கும் 4.75 சதவீதம் தொகை வேலையளிப்போர் பங்கும் சேர்ந்தது தொழிலாளர் மாநில காப்புறுதி கழகத்தின் நிதி ஆகும்.

மருத்துவ வசதிகளுக்காகும் மொத்த செலவினை முதலில் மாநில அரசு ஏற்றுக்கொள்கின்றது. பின்னர், மொத்த செலவினத்தில் 7/8 பங்கினை, காப்பீட்டாளர் ஒருவருக்கு ஆண்டிற்கு ரூ.2,000/– என்ற உச்சவரம்பிற்குட்பட்டு, (01.04.2014 முதல்) தொழிலாளர் மாநில காப்புறுதிக் கழகம் ஒவ்வொரு காலாண்டும் மாநில அரசுக்கு திரும்ப வழங்குகின்றது.

**ஆயுர்வேதம் மற்றும் யோகாசன பிரிவுகள்**

தற்போது மாநில அரசின் நிர்வாகத்தின் கீழ் உள்ள 7 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் ஆயுர்வேதம் மற்றும் யோகாசன பிரிவுகள் இயங்குகின்றன.

**யுனானி மற்றும் ஓமியோபதி பிரிவுகள்**

மாநில அரசின் நிர்வாகத்தின் கீழ் உள்ள 2 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் யுனானி மற்றும் ஓமியோபதிப் பிரிவுகள் இயங்குகின்றன.

**சித்த மருத்துவ பிரிவுகள்**

மாநில அரசின் நிர்வாகத்தின் கீழ் உள்ள 7 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளிலும், 20 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களிலும் சித்தமருத்துவப் பிரிவுகள் இயங்குகின்றன.

**திட்டத்தினை அமுல்படுத்துதல்**

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டம் இரண்டு வழிகளில் மாநிலத்தில் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

(1) ஏற்கனவே இயங்கிக்கொண்டிருக்கும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களுடன் புதிய பகுதிகளை இணைத்தல். 5,111 தொழிலாளர்களின் வசதிக்காக 2014–2015–ஆம் ஆண்டில் ஏழு புதிய பகுதிகளை ஏற்கனவே இயங்கிக்கொண்டிருக்கும் தொழிலாளர்

அரசு ஈட்டுறுதி மருந்தகங்களுடன் இணைக்க அரசு ஆணை வழங்கியுள்ளது. அறிவிக்கப்பட்ட ஏழு பகுதிகளில், இரண்டு பகுதியில் திட்டம் அமுல்படுத்தப்பட்டு விட்டது. மற்றைய ஐந்து பகுதிகளில் திட்டம் விரைவில் அமுல்படுத்தப்படும்.

(2) பல்வேறு பகுதிகளில் புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தங்களைத் துவக்குதல். 15,884 தொழிலாளர்களின் வசதிகளுக்காக ஆறு புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களைத் துவக்க 2014–2015–ஆம் ஆண்டில் அரசு ஆணை வழங்கியுள்ளது. அவை இவ்வாண்டில் துவக்கி வைக்கப்படும்.

**மருத்துவமனை மேம்பாட்டுக் குழு**

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் மற்றும் மருத்துவமனைகளின் கட்டடங்களை நிர்வகிக்கவும், சிறிய மற்றும் பெரிய பழுதுகளை நீக்கவும், மருத்துவ உபகரணங்கள் கொள்முதல் செய்யவும், பழுதுகளை

நீக்கவும் மருத்துவமனை மேம்பாட்டுக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

**கணினி மயமாக்குதல்**

இம்மாநிலத்திலுள்ள 5 நடமாடும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் தவிர்த்த அனைத்து தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளும் மருந்தகங்களும் திருவாளர்கள் விப்ரோ நிறுவனத்தினரால் அகில இந்திய அளவில் 'பஞ்சதீபம்' திட்டத்தின் கீழ் அகண்ட அலைவரிசை மூலம் மத்திய கணியத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. பதிவு வசதிகளை எளிமையாக்கும் விதமாக காப்பீட்டு நபர்களுக்கு பணிபுரியும் இடம் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் விவரங்களடங்கிய வினைத்திறன் மிக்க அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளன. இந்த அடையாள அட்டையினைப் பயன்படுத்தி காப்பீட்டு நபர்களும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களும் இந்தியாவின் எந்த தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையிலோ, மருந்தகத்திலோ சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம். இந்த

‘பஞ்சதீபம்’ திட்டத்தின் அனைத்து செலவுகளையும் தொழிலாளர் மாநில காப்புறுதி கழகமே ஏற்கும்.

**ப. மோகன்**
**ஊரகத் தொழில் மற்றும்**
**தொழிலாளர் நல அமைச்சர்**